# வீறுகவியரசர்
# முடியரசன் கவிதைகள்

## பொருண்மை வகைத் தொகுப்பு
(குமுகம்)

தொகுப்பாசிரியர்
**பாரி முடியரசன்**

உள்ளுறை

பக்கம்


பதிப்புரை
முன்னுரை
குமுகம்
1. ஊரார்
2. பாரதியின் குரல்
3. என்ன செய்து விட்டாய்?
4. மாமியும் மருமகளும்
5. உறவினர்
6. மருளும் உலகம்
7. பெற்றோர் புலம்பல்
8. குற்றங் குற்றந்தான்
9. இளைஞர்களே கேளுங்கள்
10. எல்லாம் கலப்படம்
11. கலையாம்! தொழிலாம்!
12. உலகம் எங்கள் கையிலே!
13. மண் குதிரை
14. நல்ல நேரம்
15. மனம்போல் விளையாடு
16. படியாத பிள்ளை
17. கற்பவர் செயலா?
18. நெஞ்சு பொறுக்குதில்லையே
19. நெஞ்சுத் துடிப்பு
20. அச்சு முறிந்தால்
21. வகுப்பறையும் மாணவரும்
22. நூலகமும் மாணவரும்
23. ஒப்பனையும் மாணவரும்
24. அரசியலும் மாணவரும்
25. இதழ்களும் மாணவரும்
26. திரைப்படமும் மாணவரும்
27. பெற்றவர் தூங்கினால்
28. ஓடம் பழுதானால்
29. புலவர் குறிக்கோள்
30 காசுக்கா நீதி?
31. களவும் கற்பும்
32. வருத்தும் மனையா?
33. நியாய விலைக்கடை
34. கையூட்டுலகம்
35. எது நாட்டுப்பற்று?
36. எழுத்துலகம்
37. கேள்வி பதில்
38. முளையிலே கிள்ளுக
39. திரையரங்க வீரம்
40. மனித மந்தை
41. மனிதனைத் தேடுகிறேன்
42. கடைத்தெருவில்
43. நமது வாணிகம்
44. விடிவு தோன்றும்
45. நிலமகளா கொடியவள்?
46. போலிக்குடும்பம்
47. சமுதாய வீதியில்
48. திரையுலகக் கற்பு
49. இன்றைய மனிதன்
50. வெம்புவான் கம்பன்
51. சான்றோர் செய்த பிழை
52. பாழ்பட்ட எழுத்தாளர்
53. பேச்சாளர்
54. ஈகை
55. எப்படிப் பெரியார் வாழ்வார்?
வீறுகவியரசர் முடியரசனார் புகழ் மாலை
வீறுகவியரசர் முடியரசனார் வாழ்க்கைக் குறிப்பு
பாரி முடியரசன் பற்றி

# குமுகம்

[வீறுகவியரசர் முடியரசனார் 'குமுகம்' பற்றிப் பாடிய கவிதைகள் இப்பொருண்மையில் தொகுக்கப்பட்டுள்ளன]

**(இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைககளின் தலைப்புகளுக்குக் கீழ், அக்கவிதைகள் இடம்பெற்ற நூல்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப் பெற்றுள்ளன)**

## 1. ஊரார்

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

வாழவிடார் சாகவிடார் வாழ்வில் ஓர்நாள்
வகைகெட்டு வறுமையுறின் உதவ வாரார்;
ஏழைஎனில் எதுசெயினும் ஊரார் கூடி
இதுகுறையாம் அதுகுறையாம் என்று நம்மைத்
தாழவுரைத் தின்புறுவர்; செல்வன் என்ன
தகிடுதத்தம் செய்தாலும் தாளம் போட்டு
வாழவென்றே காக்கைபிடித் தலைவர் அந்தோ!
வாழ்கின்றார் மனிதரெனும் பெயரும் தாங்கி 1

என்குடும்பக் காவியத்தில் இலங்கும் ஒவ்வோர்
ஏடுகளைப் புரட்டுகிறேன் சிறிது கேண்மின்!
என்குடும்ப விளக்கினைநான் மணவா முன்னர்
எழிலரசி அவளோடு களவொ ழுக்கம்
நன்மையென ஒழுகிவரும் நாளில், ஊரார்
நவின்றவெலாம் புகல்வதெனில் பலநாள் ஆகும்;
வன்மைமிகு பழியுரைத்தார், பொய்கள் சொன்னார்,
வகைவகையாய்த் தீமைகளை இழைத்தும் பார்த்தார் 2

நோய்வந்து பற்றியதால் சின்னாள் நங்கை
நொந்துழன்று மிகமெலிந்து வெளியில் எங்கும்
போய்வந்து நடவாமல் இருந்தாள்; ஊரார்
"பொல்லாத ஒழுக்கத்தாற் கருப்பம் உற்றாள்,
நோய்வந்த தெனச்சொல்லிக் கருவைக் கொன்றாள்,
நூதனமாத் தற்கொலைக்கும் முயன்றாள்" என்று
வாய்வந்த படியெல்லாம் அளந்து விட்டார்,
"வகையறியா தோடிவிட்டாள்" என்றும் சொன்னார் 3

மற்றவர்கள் சொல்வதெலாம் கருதா தென்றன்
மனம்விரும்பி மணமுடிக்கத் துணிந்து விட்டேன்;

கற்றவரும் மற்றவரும் சினந்து நோக்கக்
கைபிடித்தேன் பதிவுசெயும் தலைவர் முன்னே;
உற்றார்கள் ஊரார்கள் உறுமி னார்கள்
"ஒவ்வாதே சமுதாயப் பண்புக்" கென்று
சொற்றார்கள் "சாதிகுலம் போச்சே! இந்தச்
சொல்லரிய கொடுமையினை எங்குக் கண்டோம்!" 4

என்றார்கள் அவ்வளவில் விட்டா ரோ?இத்
தெருவதனில் இருப்பதுவுங் கூடா தென்றார்;
கொன்றாற்போற் கொடுமைபல செயதார்; மேலும்
குடும்பத்தில் நிகழ்கின்ற நன்மை தீமைக்
கென்றாலும் அழைப்பதிலை; வறுமை நோய்வந்
திடர்படுத்தக் கடன்கேட்டேன் கொடுத்தா ரில்லை
"நன்றப்பா கலப்புமணம்" என்று சொல்லி
நகைத்தார்கள் பகைத்தார்கள் உள்ளம் நொந்தேன்; 5

"காதல்மிகு வாழ்வினையே முன்னோர் கண்டார்,
கண்டதிலை சாதிமுறை, உயர்வு தாழ்வு
ஓதவிலை, சங்கத்து நூல்கள் சான்றாம்
உணர்ந்திடுவீர்" என்றுரைப்பர்; தலைய சைப்பர்;
காதல்மணம் கலப்புமணம் செயலிற் காட்டக்
கருதிடினோ கரடிபுலி யாக மாறித்
தீதிழைப்பர் ஊரார்கள்; பேச்சில் மட்டும்
தீரரவர் செயலென்றால் அஞ்சிச் சாவார்; 6

நாட்டுநிலை என்வருவாய் துணைவி மேனி
நலமறிந்து நான்கைந்தாண் டான பின்னர்
வீட்டினிலே என்பிள்ளை தவழ்ந்து பேசி
விளையாட நினைத்திருந்தேன்; "சாதி மாறி,
நாட்டாரும் விரும்பாத, கடவுட் கொவ்வாச்
செயல்புரிந்தான் நாத்திகத்தின் வழியிற் சென்றான்
கேட்டானா நம்முரையை? பிள்ளைப் பேறு
கிடைத்ததுவா? கடவுள் செயல்" என்றார் ஊரார். 7

நல்லுடையால் அணிசெய்து மாலை வேளை
நானவளை உடனழைத்துப் பூங்கா செல்வேன்;
வில்உளத்து மாந்தர்சிலர் மனம்வி யர்ப்பர்;
வினைவிதைப்பர்; அருகிலுளோர் செவிக டிப்பர்;
நல்லதுவோ அழுக்காறு? வறுமை மிஞ்சி
நலிவுறுத்த நல்லாடை இலையேல் இந்தப்
பொல்லாதார் அப்போதும் விடவே மாட்டார்
புல்லனென்று கஞ்சனென்று புகல்வர் அன்றோ? 8

ஊராருள் இத்தகையர் இருப்பி னும்நல்
உள்ளத்தர் ஓரிருவர் இருப்ப துண்மை;
நேராரும் விழைகின்ற ஒழுக்கம் வாய்மை
நேர்மையெனும் கொள்கையினர், மடமைக் கூட்டம்
சேராதார், சீர்திருத்த நோக்கங் கொண்டார்,
செப்புவதைச் செய்திடுவார், ஊரார் கூற்றைப்
பாராதார், உதவுகின்றார் என்றன் வாழ்வில்
பக்கமிருந் துடன்பிறந்த அண்ணா வானார் 9

காதலனைக் கோவலனை மதுரை வேந்தன்
கள்வனெனக் கொலைசெய்தான் என்று கேட்டு
வேதனையில் மூழ்கிஉயர் செல்வ வாழ்வை
வெறுத்துமணி மேகலையும் தானும் தூய
மாதவனைச் சார்ந்துமனத் துறவு பூண்ட
மாதவியை ஊரார்கள் தூற்றி னார்கள்
கோதுரைகள் செவிவிழுந்தும் புறக்க ணித்தாள்
குறிக்கோளில் வென்றிகண்டாள் கற்பின் செல்வி 10

"என்னோடு சினந்தில்லாள் அயலான் வீட்டில்
இருந்ததனால் மனமொப்பி அவளை மீண்டும்
என்னோடு வாழவிடேன் மானம் மேலாம்"

இவ்வண்ணம் ஊராருள் ஒருவன் அங்குச்
சொன்னான்அவ் வுரைகேட்டி ராமன் "என்னைச்
சுட்டினனோ? கடலிலங்கைச் சிறையி ருந்த
மின்னாளைக் கொடுவந்தேன்" எனவ ருந்தி
மீண்டுமவள் வெங்கானம் போக விட்டான் 11

மெல்லியலாள் தன்மனையாள் எனவும் எண்ணான்
மேலுமொரு பதினாலாண் டவளும் கானில்
அல்லலடைந் தாளென்றும் கருதல் செய்யான்
ஆரணங்கு கருவுற்றாள் எனவும் பாரான்
மல்குசின மேகொண்டான் ஊரார் சொன்ன
மாற்றமொன்றே மதித்தானச் சனகன் பெண்ணைச்
சொல்லரிய துயரோடு கானம் ஏகச்
சொன்னான்அக் குடும்பத்தில் பிரிவும் கண்டான் 12

உரைத்திடுவர் ஊரார்கள் தங்க ருத்தை
ஒன்றுக்கும் செவிசாய்த்தல் கூடா தன்னோர்
உரைப்பதனைச் செவிமடுத்தால் குடும்ப வாழ்வில்
உலைவுவரும் உண்மையிது; புளியைப் பாலில்
கரைக்காதீர் பிறருரையைக் கேட்டு வாழ்வில்
கலங்கிமிகத் துயருழந்து சாக வேண்டா
குரைக்கின்ற ஒலிகேட்டுக் கதிரோன் வானில்
குறுகுவதற் கஞ்சுவனோ? அவன்போல் வாழ்வீர் 13

உரைத்தவெலாம் ஆண்பாலர் செயலே ஆகும்
ஊராருள் பெண்ணினமோர் அங்கம் அன்றோ?
மறைப்பின்றி அவர்செயலும் சொல்லு கின்றேன்;
மாமியிடம் சென்றோர்பெண் அவள்ம னத்தைக்
கரைத்திடுவாள், மருமகளைக் குறைகள் சொல்வாள்,
"கண்டபடி உனைவைதாள், மதிக்க வில்லை,
விறைப்போடு திரிகின்றாள், அடக்கம் இல்லை,
வீதியெலாம் கைகொட்டிச் சிரிக்கு" தென்பாள், 14

மற்றொருநாள் மருமகளைக் காண்பாள் "உன்றன்
மாமியென்ன இப்படியா இருப்பாள்? உன்னைப்
பெற்றவள்போற் கருதாமல் தாழ்த்தித் தாழ்த்திப்
பேசுகிறாள், உடையுடுத்த நகைகள் பூணச்
சற்றுமவள் பொறுக்கவிலை, கணவன் உன்கைச்
சரடாக உள்ளானாம், குடும்பச் செய்தி
மற்றவர்பால் இவ்வண்ணம் பேசல் நன்றோ?
மருமகள்தான் பணிப்பெண்ணோ"என்று சொல்வாள் 15

இப்படியே இருபாலும் கோளே பேசி
இணைந்திருந்த குடும்பத்திற் பகையை மூட்டித்
தப்பறியாக் கணவனுளம் நோகும் வண்ணம்
சச்சரவே நிறைத்திடுவாள்; ஊரார் சொல்லை
அப்படியே நம்புவதால் விளையும் தொல்லை
அளவிலவே ஆதலினால் ஆய்ந்து செய்து
தப்பெதுவும் நேராமல் அன்பாய் வாழ்ந்து
தரணிபுகழ் மாமிமரு மகளாய் வாழ்வீர் 16

ஆண்டுபல ஆனாலும் நரையே யின்றி
அழகுகெடா திளமையுடன் விளங்க வேண்டின்
பூண்டொழுகும் அன்படக்கம் அறிவு சால்பு
பூணெனக்கொள் சான்றோராய் ஊரார் வாழ
வேண்டுமென எங்கள்பிசி ராந்தைப் பேரோன்
விளம்பினனவ் வுரைபோற்றி மக்கட் பண்பு
தாண்டாமல் வாழ்ந்திடுக ஊரார் எல்லாம்;
தழைத்திடுமே அன்புமகிழ் வின்பம் யாவும்! 17

---

**பாடற் குறிப்பு:–** காரைக்குடி, கம்பன் திருநாள் கவியரங்கில் திரு. நாமக்கல் கவிஞர் தலைமையில் பாடப் பெற்றப் பாடல்.

## 2. பாரதியின் குரல்
(நூல்:—காவியப் பாவை)

வீதிகள் எங்கணும் என்புகழே – பாடி
   வெற்றி முழக்கிடும் மானிடரே
சாதிகள் இன்னும் தொலைத்தீரோ – பொய்மைச்
   சாத்திரம் ஏதும் விடுத்தீரோ? 1

ஆடியும் பாடியும் கூத்தடிப்பீர் – என்றன்
   ஆர்வமெ லாம்எங்கோ போட்டழித்தீர்
பாடிய என்னுடைப் பாக்களிலே – அந்தோ
   பற்பல ஊனங்கள் ஆக்கிவிட்டீர்! 2

தன்னலம் ஒன்றையே மேம்படுத்த – என்பால்
   சாகசக் காதலைக் காட்டுகிறீர்
என்னுளம் யாதென எண்ணுகிலீர் – உமக்
   கேற்பவே என்னைச் சுழற்றுகிறீர்! 3

தெய்வங்கள் பற்பல வேண்டுகிறீர் – பகைத்
   தீயை வளர்த்திங்கு மாளுகின்றீர்
உய்யும் வழிசொன்ன என்மொழியைப் – புதைத்
   தோங்கிய மண்டபங் கட்டிவிட்டீர்! 4

கோவிலில் மாணவர் கல்விபெறப் – பள்ளிக்
   கூடங்கள் ஆக்கிட முன்வருவோர்
ஆவலைக் கொன்று விழுங்குதற்கே – சட்டம்
   ஆக்கிட முன்னிருந் தார்ப்பரிப்பீர்! 5

தீண்டாமை என்றொரு சாக்கடையை – இன்னும்
   தெய்வத்தின் முன்னரும் பாய்ச்சுகின்றீர்
வேண்டாமென் றெத்துணைப் பாடல்சொன்னேன் – எலாம்
   வீணாக்கி என்பெயர் பாடுகின்றீர்! 6

ஐயையோ என்னுயிர்ப் பாடல்பல – இன்னும்
   ஆரு மறியாமல் பூட்டிவைத்தீர்
வையைக் கரைதனில் ஓரறையில் – அவை
   வாழ்விழந் திங்ஙனம் மாய்வதுவோ? 7

செந்தமிழ் இன்பம் சிறந்ததென்றேன் – சுவைத்
   தேனினும் மேலதாச் செப்பிவைத்தேன்
நொந்திட என்னுளம் செய்துவிட்டீர் – என்றன்
   நோக்கம் அனைத்தும்வீண் ஆக்கிவிட்டீர்! 8

ஒண்டவந் தார்விடுத் தோடியபின் – நாட்டில்
   ஒப்பில் சமுதாயம் ஆக்கிடவே
கண்ட கனவெலாம் பாழ்படுத்தி – நெஞ்சும்
   கண்ணுங் கலங்கிடச் செய்துவிட்டீர்! 9

இன்னுமித் தீநெறி நாடுவதை – நீக்கி
   ஏற்றம்பெற் றோங்க உழைத்திடுவீர்
சொன்னதைச் செய்கையில் காட்டிடுவீர் – என்னைத்
   தூயநல் லன்புடன் நாடிடுவீர்! 10

## 3. என்ன செய்து விட்டாய்?
(நூல்:—காவியப் பாவை)

எடுப்பு

எதனைச் செய்தே உயர்ந்துவிட்டாய் – நீதான்
எதனால் உலகிற் சிறந்துவிட்டாய்?

—எதனை

தொடுப்பு

இதயம் ஒன்றை மறந்துவிட்டாய் — கண்கள்
இருந்தும் ஒளியைத் துறந்துவிட்டாய்

—எதனை

முடிப்பு

சிரிக்கத் தெரிந்தும் மறைத்துவைத்தாய் — நீயே
சிந்தையில் அன்பைக் குறைத்துவைத்தாய்
திறக்குங் கதவை அடைத்துவைத்தாய் — நெஞ்சில்
தீமைகள் யாவும் படைத்துவைத்தாய்

—எதனை

எதனால் நீதான் செருக்கடைந்தாய்? — உள்ளம்
இல்லை அதனால் உருக்குலைந்தாய்
உதவும் நினைவை இழந்துவிட்டாய் — வீணில்
உடலால் சுமைபோல் வளர்ந்துவிட்டாய்

—எதனை

பள்ளியில் எல்லாம் படித்துவிட்டாய் — ஆனால்
படித்ததை அங்கே முடித்துவிட்டாய்
தெள்ளிய அறிவைக் கெடுத்துவிட்டாய் — அதனைத்
தீமைக் கெனவே கொடுத்துவிட்டாய்

—எதனை

பேச்சில் முழுதுஞ் சொல்லிவிட்டாய் — வீணில்
பெருமைகள் யாவும் அள்ளிவிட்டாய்
பூச்சும் வேடமும் போட்டுநின்றாய் — செயலில்
புன்மைகள் மட்டுமே காட்டுகின்றாய்

—எதனை

வானில் நடந்தே முடித்துவிட்டாய் — அங்கே
வண்ண நிலாவைப் பிடித்துவிட்டாய்
ஏனை வியப்பும் நடத்திவிட்டாய் — ஆனால்
ஏனோ குணத்தைக் கெடுத்துவிட்டாய்

—எதனை

அறிவின் எல்லை அறிந்துகொண்டாய் — இயற்கை
ஆற்றலை எல்லாந் தெரிந்துகொண்டாய்
உரிமை வாழ்வும் விரும்புகின்றாய் — மற்றோர்
உரிமையை மட்டுஞ் சுரண்டுகின்றாய்

—எதனை

ஓரா யிரமுறை ஆடுகின்றாய் — கடவுள்
ஒவ்வொன் றின்முனும் பாடுகின்றாய்
மாறா இன்பந் தேடுகின்றாய் — ஆனால்
மனிதனை மட்டும் சாடுகின்றாய்

—எதனை

மனிதனை மனிதன் விரும்பிவிட்டால் — நெஞ்சில்
மானிட அன்பே அரும்பிவிட்டால்
தனிமனி தன்மனந் திருந்திவிட்டால் — உலகம்
சரிநிகர் சமமாய் உயருமடா

—எதனை

## 4. மாமியும் மருமகளும்!

**(நூல்:—காவியப் பாவை)**

எடுப்பு

மருமகளைப் படுத்துகிற துன்பம் — சொந்த
மாமிக்குத் தந்துவரும் தனியான இன்பம்

—மருமகள்

முடிப்பு

சட்டியை ஏன்போட் டுடைத்தாய் — வீட்டைச்

சரியாகக் கூட்டென்று சொன்னேன்மு றைத்தாய்
கொட்டியா இங்கே கிடக்கு? – அப்பன்
கொடுத்தானோ சீரெல்லாம்? வாயைய டக்கு

கொண்டவனை வசமாக்கிக் கொண்டாய்! – நீதான்
குடும்பம் நடத்துகிற பாங்கையே கண்டால்
அண்டையிலே சிரிப்பார்கள் உன்னை – இவளை
அடக்காமல் விட்டாயே என்பார்கள் என்னை

நீவந்து கால் வைத்த நாளாச் – செல்வம்
நீறாகிப் போச்சுதே வாழ்வெல்லாம் பாழாய்!
நோய்வந்து வீழ்ந்தான் உன் ஆளன் – உன்னை
நொடிப்போதில் உயிர்கொண்டு போகானோ காலன்!

கொன்றாலும் ஆறாது நெஞ்சம் – என்னைக்
கொஞ்சமும் மதிக்காமல் திரிகின்றாய் பஞ்சை
என்றென்று பலவாறு பேசி – முகத்தில்
இடிப்பாள் அடிப்பாள் மறைப்பாளே பூசி

குனிந்தாலும் நிமிர்ந்தாலும் குற்றம் – வாயில்
கொட்டாவி விட்டாலும் குற்றமே குற்றம்
இனிதான ஒருவார்த்தை உண்டா? – ஐயோ
இப்படியா படவேண்டும் மருமகளாய் வந்தால்?

## 5. உறவினர்

**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

எண்சீர் விருத்தம்

தந்தைவழி தாய்வழியில் உறவு மில்லை
தம்பிதங்கை அண்ணனென ஒருவ ரில்லை
எந்தவழி சுற்றினுமோர் பங்கு கேட்கும்
தாயத்தார் எவருமில்லை; உறவெ னக்குச்
செந்தமிழ்தான்; ஈதன்றி மனைவி மக்கள்
உறவினராச் செப்புதற்கிங் கிருக்கின் றார்; நான்
எந்தவழி உறவினரைக் காட்ட வல்லேன்?
இருப்பினுமென் கற்பனையில் காட்டு கின்றேன் 1

முப்போகம் விளைகின்ற நன்செய் உண்டு
முகில்குளிரச் செய்கின்ற தோப்பும் உண்டு
தப்பாது விளைகின்ற புன்செய் உண்டு
தங்கநகை துணிமணிகள் அனைத்தும் உண்டு
[1]துப்பாக்கும் பொழுதத்துப் புகைகள் கூடிச்
சுடர்மறைக்கும் மேகமென நாளுந் தோன்றும்
அப்போது வருமுறவோர் அடடா! சொல்லில்
அடங்குவதோ? ஆயிரமாம் அதற்கும் மேலாம் 2

எங்கிருந்தோ எவரெவரோ வருவார்; வந்திங்
கென்னலமும் மனைநலமும் வினவி நிற்பார்;
தங்கியிருந் தெதையெதையோ கதை யளப்பார்;
தயங்காமல் உறவுரைப்பார்; ‘உங்கள் பாட்டன்
தங்கைக்குக் கணவனுடன் பிறந்தான் மாமி
தம்பிக்கும், என்பாட்டி தங்கை மாமன்
பங்காளி மகளுக்கும் மணமு டித்த
பனையூரார் எங்களவர்’ என்று சொல்வார் 3

இப்படியே உறவுரைத்து வந்து சூழும்
என்சுற்றம் மாநாட்டுக் கூட்டம் ஒக்கும்;
முப்பொழுதும் திருமணத்துக் காலம் போல
மொய்த்திருந்து விருந்துண்பார் ஒலியே கேட்கும்;
ஒப்புரவுப் பண்புணர்ந்தேன் உவந்து நிற்பேன்;

உறவினர்க்கு [2]ஙப்போல நானி ருந்தேன்;
இப்புவியில் இத்தனைப்பேர் உறவி ருக்க
எனக்கென்ன குறையென்று நிமிர்ந்தி ருந்தேன் 4

வானத்து வெண்ணிலவாய் நானி ருப்பேன்
வட்டமிடும் உறவினர்கள் விண்மீன் ஆவர்;
கானத்துப் பழுமரத்தில் கனிகள் உண்ணக்
கடுகிவரும் பறவையினம் போலச் சூழ்வர்;
[3]பூநத்தும் தேனீக்கள் கூட்டில் மொய்த்தல்
போற்கிளைஞர் பெருங்குழுவாய் வீட்டில் மொய்ப்பர்;
தேனொத்த வெல்லத்தை மோப்பங் கண்டு
தேடிவரும் எறும்பினத்தின் சாரை போல்வார்; 5

ஆவணியில் காதணிநாள் நிகழ்த்த எண்ணி
ஆய்ந்தொருநாள் தேர்ந்தெடுத்து நெஞ்சிற் கொண்டு
பாவைநிகர் என்மனையாள் செவியிற் சொன்னேன்;
பாய்ந்தோடி உறவினர்கள் ஆடி மாதம்
போவதன்முன் தம்குடும்பம் சுற்றம் சூழப்
புகுந்தார்கள்; திடுக்கிட்டுத் துணையைப் பார்த்தேன்
“தேவையிலை இனியழைப்பு, செலவு மிச்சம்”
என்றுரைத்தாள் தேன்மொழியாள்; திகைத்து நின்றேன் 6

சாதியினை ஒழிப்பதுநம் கடமை என்று
தக்கவளைக் கலப்புமணம் செய்து கொண்டேன்;
காதலினால் பூத்தமணம் உறவினர்க்குக்
கடுகளவும் நறுமணமாய்த் தோன்ற வில்லை;
வேதநெறி பிழையாத அன்னார் என்றன்
வீட்டுக்குள் வந்துவிடின், என்முன் நின்றே
ஏதமிலாச் செயலாற்றும் கொள்கை வீரர்
என்றெல்லாம் பட்டங்கள் வழங்கிச் செல்வார் 7

உள்ளொன்றும் புறமொன்றும் பேசி நிற்கும்
உறவினரைப் படைக்கின்ற தெய்வம் ஆகி
வெள்ளைநிறம் கொண்டிங்கே உலகை ஆட்டி
விளையாடும் பணநாதன் கடைக்கண் நோக்கம்
துள்ளிவிளை யாடுவதால் என்மேற் குற்றம்
துணிந்துரையார்; பகைமாற்றி உறவை ஆக்கும்
வெள்ளையப்பன் புரிகின்ற விளையாட் டெல்லாம்
விரித்துரைப்பின் விந்தையினும் விந்தை யன்றோ! 8

உறவான ஒருவர்திரு மணத்துக் காக
[4]ஒள்ளிழையை மக்களுடன் அழைத்துச் சென்றேன்,
மெருகோடு விளங்குமுயர் உந்து வண்டி
விட்டிறங்கி நிற்பதன்முன் மணத்து விட்டார்
வருகவரு கென்றெனக்கு மாலை சூட்டி
வரவேற்ற காட்சியினைக் கண்டோர் அங்கு
வருகின்ற மணமகனோ என்ற [5]யிர்த்து,
வாழ்வரசி அருகிருக்க ஐயம் விட்டார் 9

நான்பெற்ற செல்வத்தை எடுத்துக் கொஞ்சி
நலமிக்க கன்னத்தைச் சிவக்க வைத்தார்;
“தேன்பெற்ற சொற்பேசும் சித்தி ரங்கள்
தெளிவாகத் தங்களையே வார்த்தெ டுத்தாற்
போன்றிருக்கக் காண்கின்றோம்” என்று ரைத்தார்;
புதல்வரெல்லாம் என்மனையாள் போன்றி ருந்தும்
தேன்சொட்டப் புனைந்துரைத்த உறவின் மாந்தர்
திருவிளையாட் டெடுத்துரைத்தல் இயல்வ தொன்றோ? 10

“தண்ணீரோ வெந்நீரோ குளிப்ப தற்கு?
தமக்கென்று தனியறையும் ஒதுக்கி விட்டோம்;
உண்பீரோ இவ்வுணவு? களைத்தி ருப்பீர்!
ஓய்வுகொளத் துயிலுங்கள்” என்று ரைத்து
மண்மகளைக் காணாது விரித்து வைத்த

மலர்மெத்தை தலையணைகள் காட்டி நின்று
பண்பாடி அருகிருந்து தாளம் போட்டுப்
பல்வரிசை காட்டுகிற உறவு கண்டேன் 11

விரைந்துவரும் பொழுதத்துச் சட்டைப் பொத்தான்
விட்டுவந்தேன்; உறவினர்கள் அதனைக் கண்டு
மறைந்திருந்து பேசுகின்றார்'' அட்டா இந்த
மனிதரிடம் எளிமையைத்தான் காண்பீர்! செல்வம்
நிறைந்தவர்கள் இப்படித்தான் இருத்தல் வேண்டும்
நிறைகுடங்கள் எப்போதும் தளும்பா அன்றோ?
குறைந்தவர்தாம் கூத்தடிப்பர்'' என்று தம்முள்
கூறுவது செவியில்விழ நகைத்துக் கொண்டேன் 12

சின்னாளில் வணிகத்தில் நட்டங் கண்டேன்
சேர்ந்தடித்த பெரும்புயலால் வயல்கள் கெட்டேன்
பொன்னகைகள் மாளிகைகள் ஒற்றி வைத்தேன்
பொருள்முட்டுப் பாடடைந்து துயரால் நொந்தேன்;
எந்நாளும் என்வீட்டில் உண்டு வந்த
எண்ணில்லா உறவினரைக் காண வில்லை;
பின்னோடித் தேடினுமே [6]அஞ்ச லென்று
பேசுதற்கோர் ஆளில்லை தனித்து நின்றேன் 13

பணநாதன் அருளில்லாக் கார ணத்தால்
பறவைகளாய்ப் பறந்தோடி விட்டார்; மேலும்
கணமாக வந்தென்னை எறும்பு போலக்
கடித்தார்கள்; கலப்புமணம் பழித்து ரைத்தார்;
குணமில்லாத் தேனீயாய்க் கொட்டி னார்கள்;
கூடிவருங் காலத்துக் கூடி வந்தார்
உணவோடு நலம்பெற்றார்; செல்வ மெல்லாம்
ஓடிவிடுங் காலத்தில் ஓடி விட்டார் 14

இப்பொழுதும் ஒருவர்திரு மணத்துக் காக
என்குடும்பத் துடன்சென்றேன்; வரவு கூற
எப்பொழுதும் முன்னிற்போர் எவரும் இல்லை;
என்துணைவி வெறுங்கழுத்தும் கையுங் கண்டார்;
சிப்பிதரு பொத்தான்கள் இல்லாச் சட்டை
சிலைநிகர்க்கும் என்மக்கள் அனைத்துங் கண்டு
செப்புகின்றார் பஞ்சைஎன; ஒதுங்கி நின்றார்;
சிரித்திருந்தேன் உறவினர்தம் செய்கை கண்டு 15

படுப்பதற்கோர் படுக்கையிலை பாயும் இல்லை;
பக்கத்து விட்டிலொரு திண்ணை யோரம்
தடுப்பதற்கோ ஆளில்லை சாய்ந்து கொண்டேன்;
தவமிருந்து பெற்றமக வொன்றை அங்கே
அடிப்பதைநான் கண்டெழுந்து தடுத்து நின்றேன்;
''அப்பப்பா இப்பொழுதே திருடக் கற்றுக்
கொடுப்பதற்கோ அழைத்துவந்தாய்?'' என்று சொல்லிக்
குழந்தையின்கைக் கனியொன்றைப் பறித்துச் சென்றார் 16

பொருளுடைய பொழுதிற்றான் வந்து சூழ்ந்து
போற்றுகிற உறவுமுறை வளர்ந்து காணும்;
பொருளிலையேல் ஒருபொருட்டா மதியா தன்றிப்
புன்மொழிகள் புகலுதற்கும் அஞ்சா தந்தோ!
பொருளுளதேல் சாப்பாட்டுக் கூட்டம்; கெட்டுப்
போய்விடினோ கூப்பாட்டுக் கூட்டம் என்ற
பொருளுரையைக் காட்டுகிற உறவை நம்பிப்
புவிதன்னில் வாழ்வதுதான் நன்றோ சொல்வீர்! 17

இப்புவியில் என்னுறவின் முறைதான் சொன்னேன்
ஈண்டுள்ளோர் நல்லவர்கள் குறளிற் கூறும்
ஒப்புரவு தெரிந்தவர்கள்; திருக்கு றட்கே
உயர்வுதரத் தேனப்பன் என்னும் நண்பன்
செப்பரிய முயற்சியினால் இங்குக் கண்ட
திருக்குறளின் கழகத்தில் உறவு கொண்டோர்;

நற்குடும்ப நெறியறிந்து வாழும் சான்றோர்
    நலமனைத்தும் பெற்றிங்கு வாழ்க! வாழ்க! 18

---

**பாடற் குறிப்பு:–** 19.7.1959 அன்று, காரைக்குடிக் குறள் விழாக் கவியரங்கில், 'குறள் நெறிக்குடும்பம்–உறவினர்' என்ற தலைப்பில் பாடப்பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. துப்பாக்கும் – சமைக்கும். 2. நப்போல் – 'நப்போல் வளை' என்னும் முதுமொழிக் கிணங்க. 3. பூநத்தும் – பூவை விரும்பும். 4. ஒள்ளிழை – ஒளிபொருந்திய நகைகளை அணிந்த மனைவி. 5. அயிர்த்து – ஐயங்கொண்டு. 6. அஞ்சல் – அஞ்சாதே.

## 6. மருளும் உலகம்

**(நூல்:–பாடுங் குயில்)**

உலகம் மாறி உருள்கிறது
மனமும் சுருங்கி மருள்கிறது
கலகம் காண விரைகிறது
கடமை யாவும் குறைகிறது 1

சமயம் சாதிப் பிளவுகளால்
சண்டை ஒன்றே வளர்வதனால்
இமயம் குமரி இடைவெளியில்
எங்கும் பண்பே தளர்கிறது 2

மாந்தர் என்னும் உணர்வுகளை
மறந்தே போனோம் மதவெறியில்
நீந்தும் வழியே தெரியவில்லை
நீளும் பகைமை மறையவில்லை 3

போரே எங்கும் புகைகிறது
போதனை மட்டும் வளர்கிறது
யாரே வருவார் அமைதிதர?
எவரும் இல்லை பகைகுறைய! 4

நாவில் மட்டும் நல்லுரைகள்
நயவஞ் சகமே உள்ளுறையில்
சாவில் செல்லும் உலகமிது
சற்றே எண்ணின் நலம்பெறுமே 5

## 7. பெற்றோர் புலம்பல்

**(நூல்:–பாடுங் குயில்)**

உண்ணுஞ் சுவையமு தூட்டிவிட்டோம் – நன்மை
    ஓதிடும் பள்ளியில் கூட்டிவிட்டோம்
எண்ணம் அனைத்தையும் வாட்டிவிட்டீர் – ஊரார்
    ஏளனஞ் செய்திடக் காட்டிவிட்டீர்! 1

கற்றவர் சொல்லையுங் கேட்பதில்லை – வீணே
    காலஙகள் போவதும் பார்ப்பதில்லை
பெற்றவர் சொல்லையும் ஏற்பதில்லை – நல்ல
    பிள்ளைகள் யாரையும் சேர்ப்பதில்லை! 2

வேடிக்கை செய்வதும் எல்லையில்லை – பள்ளி
    வேளைதொறுஞ் சென்று கற்பதில்லை
நாடிக்கை வண்ணமே காட்டிநின்றால் – உங்கள்
    நாளை நடப்பென்ன காளைகளே? 3

சட்டையில் மாற்றங்கள் கண்டுவிட்டீர் – நல்ல
    சால்பையும் ஐயயோ கொன்றுவிட்டீர்!

[1]அட்டைகள் தூக்கலில் வென்றுவிட்டீர் – ஆனால்
ஆகா நெறிக்கன்றோ சென்றுவிட்டீர் 4

பாழ்வினை எத்தனை செய்துவிட்டீர் – அந்தோ
பள்ளியில் கல்வியைக் கொய்துவிட்டீர்
யாழிசை கேட்டிடக் காத்திருந்தோம் – ஆனால்
ஆந்தையின் கூக்குரல் கேட்டுநொந்தோம் 5

பெற்றவர் நாங்களோ வாழ்ந்துவிட்டோம் – எங்கள்
பிள்ளைகள் நீங்களோ தாழ்ந்துகெட்டால்
உற்றதை எப்படிக் கண்டிருப்போம்? – வாயை
ஊமைகள் போலவா கொண்டுநிற்போம்? 6

---

**பாடற் குறிப்பு:–** 4.5.1973 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–**
1.அட்டைகள் தூக்குவது–ஊர்வலத்தில் அட்டைகள் தூக்குவது.

## 8. குற்றங் குற்றந்தான்
**(நூல்:–பாடுங் குயில்)**

பத்தியின் பேரால் நடந்தா லென்ன
பகுத்தறி வாலது நடந்தா லென்ன
கற்றவன் தீமை புரிந்தா லென்ன
மற்றவன் அதையே செய்தா லென்ன

குற்றங் குற்றந்தான் – ஒரு
சட்டஞ் சட்டந்தான் 1

பட்டைகள் தீட்டிக் கொட்டைகள் கட்டிப்
பதுக்கலும் கடத்தலும் செய்தா லென்ன
சட்டையை மாட்டிச் சமத்துவம் பேசிச்
சதிச்செயல் திருட்டுகள் செய்தா லென்ன

குற்றங் குற்றந்தான் – ஒரு
சட்டஞ் சட்டந்தான் 2

கோவிலில் நாடொறும் பூசனை செய்வோர்
கும்பிடுஞ் சிலையைத் திருடின ரேனும்
[1]பாவிய மடமையைச் சாடிடுந் தூய
பகுத்தறி வாளர் கவர்ந்தன ரேனும்

குற்றங் குற்றந்தான் – ஒரு
சட்டஞ் சட்டந்தான் 3

ஆட்சியில் ஏறி அறநெறி காப்போர்
ஆசையில் தவறுகள் இழைத்தா லென்ன
மாட்சிமை அறியா வஞ்சகர் கூடி
மற்றவர் பொருளைப் பறித்தா லென்ன

குற்றங் குற்றந்தான் – ஒரு
சட்டஞ் சட்டந்தான் 4

கற்றவர் என்போர் கயமைகள் யாவும்
கலைஎனும் பேரால் செய்தா லென்ன
மற்றவர் இங்கே மடமைகள் யாவும்
வயிறெனும் பேரால் செய்தா லென்ன

குற்றங் குற்றந்தான் – ஒரு
சட்டஞ் சட்டந்தான் 5

வெள்ளியி லான விளக்கது கொண்டு

வேய்ந்திடுங் கூரையில் வைத்தா லென்ன
கொள்ளிக ளான விறகினைக் கொண்டு
குடிசையில் நெருப்பினை வைத்தா லென்ன

குற்றங் குற்றந்தான் – ஒரு
சட்டஞ் சட்டந்தான் 6

கன்னியர் தவறின் கண்டனம் வேறு
காளையர் பிறழ்ந்தால் அதன்பெயர் வேறா?
இந்நிலை கண்டார் அறமென ஓதார்
இழிசெயல் ஒன்றினை யார்செய் தாலும்

குற்றங் குற்றந்தான் – ஒரு
சட்டஞ் சட்டந்தான் 7

---

**பாடற் குறிப்பு:–** 11.2.1974 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. பாவிய – பரவிய.

## 9. இளைஞர்களே கேளுங்கள்

**(நூல்:–பாடுங் குயில்)**

இளையவரே ஒன்று கேளுங்கள் – சொல்லும்
என்மொழி கேட்டே வாழுங்கள்
பழகிட என்முன் வாருங்கள் – நல்ல
பண்புடன் நீர்முன் னேறுங்கள் 1

கலைகளைக் கற்றே தேருங்கள் – அங்கே
கற்பதை வாழ்விற் சேருங்கள்
நிலைகளை இங்கே பாருங்கள் – கையை
நெஞ்சினில் வைத்தே கூறுங்கள் 2

அரசியற் பாடம் போற்றுங்கள் – போற்றி
அறிவினை நெஞ்சில் ஏற்றுங்கள்
அரசியற் போரில் நாட்டங்கள் – செல்லின்
அய்யோ சூழும் வாட்டங்கள் 3

உடைகளைச் சற்றே மாற்றுங்கள் – நாட்டின்
உடைமைகள் எல்லாம் போற்றுங்கள்
கடமையைச் செய்தே காட்டுங்கள் – கெட்ட
கயமையைத் தூவென் றோட்டுங்கள் 4

பொதுவிடம் நீங்கள் செல்லுங்கால் – செய்யும்
புன்செயல் யாவுந் தள்ளுங்கள்
எதுசரி என்றே சொல்லுங்கள் – பின்னர்
எவ்வழி நன்றோ செல்லுங்கள் 5

சாதியின் வேரை வெட்டுங்கள் – நெஞ்சில்
சமநிலைப் பண்பை ஒட்டுங்கள்
மேதினி எல்லாஞ் சுற்றுங்கள் – அங்கே
மேன்மைகள் கண்டே பற்றுங்கள் 6

வாழ்க்கையில் மேடு பள்ளங்கள் – போக்க
வழிவகை கண்டே கொள்ளுங்கள்
தாழ்ச்சிகள் எல்லாந் தள்ளுங்கள் சோம்பித்
தளர்வதை நீங்கள் எள்ளுங்கள் 7

மொழிபல கற்கச் செல்லுங்கள் – ஆனால்
முத்தமிழ் உயிராச் சொல்லுங்கள்
இழிசெயல் சாய்த்தே வெல்லுங்கள் – நாட்டில்
எழில்வளங் காண நில்லுங்கள் 8

---

**பாடற் குறிப்பு:—** 23.9.1975 ஆம் நாள் பாடியது.

## 10. எல்லாம் கலப்படம்

**(நூல்:—பாடுங் குயில்)**

உண்பொருள் எல்லாங் கலப்படம் — பேசும்
உண்மையில் பொய்யுங் கலப்படம்
கண்படும் யாவுங் கலப்படம் — இங்கே
கண்ணியம் எங்கே உருப்படும் 1

பண்புகள் எல்லாங் கலப்படம் — எண்ணிப்
பார்ப்பவர் நெஞ்சில் புலப்படும்
மண்படும் எண்ணெய் கலப்படம் — வஞ்சர்
மண்டையில் கூடக் கலப்படம் 2

செந்தமிழ்ப் பாட்டில் கலப்படம் — நெஞ்சில்
சிந்தனை, பேச்சில் கலப்படம்
சந்தனப் பூச்சில் கலப்படம் — கோவில்
சாமிகள் கூடக் கலப்படம் 3

நெய்திடும் நூலில் கலப்படம் — நல்ல
நெய்தரும் பாலில் கலப்படம்
செய்தொழில் யாவுங் கலப்படம் — கள்வர்
செய்கையின் பேரே கலப்படம் 4

வாணிகர் வேலை கலப்படம் — இங்கே
வள்ளலில் கூடக் கலப்படம்
தோணிகள் ஏறுங் கலப்படம் — நாட்டின்
தூயநல் மானம் புறப்படும் 5

நோய்மருந் தெல்லாங் கலப்படம் — வந்த
நோய்களும் எங்கே சரிப்படும்?
காய்கனி கூடக் கலப்படம் — காவல்
காத்திடுஞ் சட்டங் கலப்படம் 6

[1]வேந்தியல் காரர் கலப்படம் — அன்னார்
வீட்டினுள் சென்றால் வெளிப்படும்
மாந்தருக் கெல்லாம் வெளிப்படை — ஆனால்
மாற்றிடத் தானே பொறுப்பிலை 7

தாயகப் பேரைக் கெடுத்திடின் — மீளாத்
தண்டனை தந்தால் சரிப்படும்
வாய்மொழிப் பேச்சா திருத்திடும்? — சொன்னால்
வஞ்சகர்க் கெங்கே புலப்படும்? 8

---

**பாடற் குறிப்பு:—** 6.10.1975 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:—** 1. வேந்தியல்காரர் — அதிகாரிகள்.

## 11. கலையாம்! தொழிலாம்!

**(நூல்:—பாடுங் குயில்)**

திரைப்படம் என்றொரு தொழிலாம் — மாதர்
மறைப்பிடம் என்பதங் கிலையாம்!
உருப்படு மாஎனிற் கலையாம்! — ஐயோ
உரைத்திடின் மானமும் விலையாம்! 1

கடைத்தொழில் உண்டெனில் அதுதான் — காசு
கிடைத்திடச் செய்வதும் அதுதான்

புடைத்தெடுத் தாலது உமிதான் – நெஞ்சைக்
கெடுத்திடச் செய்திடும் மதுதான் 2

பதுக்கலைக் காட்டிடும் கதையாம் – அங்கே
பிதுக்கிய மாதரின் சதைதான்
புதுக்கலை என்றொரு விதமாம் – பண்பைப்
புதைத்திட வந்திடும் சதிதான் 3

நெறிப்படும் போக்கினில் இலையே – காம
வெறிப்பட ஆக்கிடும் வலையே
சரிப்படச் செய்பவர் இலையே – பண்பை
முறித்திடச் செய்வதொர் கலையோ? 4

துணிந்திடும் மாதரும் உருள்வார் – கட்டிப்
பிணைந்தவர் போதையில் புரள்வார்
அணைந்திடில் தான்புகழ் வருமாம் – அந்தோ!
அணைந்தது பெண்மையும் பொருளால் 5

நகைத்திட மெல்லுடல் வளைவார் – பெண்மை
திகைத்திடக் கோணலில் குழைவார்
தகைத்திடும் ஆடையைக் களைவார் –அந்தோ
புகைப்படங் காட்டிட அலைவார் 6

படுத்திடும் காதலர் அறையில் – உள்ளே
நடத்திடும் செய்கையைத் திரையில்
படைத்திடல் தானொரு கலையா? பண்பை
முடித்திட வேஎழும் கொலையா? 7

கலைப்பெயர் சொல்லியே திரிவார் – கெட்ட
புலைத்தொழில் ஒன்றையே புரிவார்
நிலைத்திடு சிந்தனை யறிவார் – இங்கே
தலைப்படி னேநலம் உருவாம் 8

மடத்தனம் மிக்கனர் மடவார் – ஆண்கள்
தடுத்திலர் முற்பட [1]மிடைவார்
குடித்தனந் தானுருப்படுமா? – அந்தப்
படத்தொழில் தான்சரிப் படுமா? 9

---

**பாடற் குறிப்பு:–** 6.10.1975 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. மிடைவார் – நெருக்கமாகக் கூடுவார்.

## 12. உலகம் எங்கள் கையிலே!

**(நூல்:–பாடுங் குயில்)**

குலுக்கிக் குலுக்கி ஆட்டுவோம் – உடலைக்
குனிந்து நிமிர்ந்து காட்டுவோம்
துலக்கி ஆசை ஊட்டுவோம் – எம்மைத்
தொடருங் காசைக் கூட்டுவோம் 1

காமஞ் சொட்டப் பாடுவோம் – ஆடை
கலைய விட்டே ஆடுவோம்
காமக் காட்சி நாடுவோம் – அந்தக்
கலையை வளர்க்கக் கூடுவோம் 2

நடிப்பை முகத்தில் தேக்கினால் – எவரே
நயந்து வந்து பார்க்கிறார்?
இடுப்பை வளைத்துக் காட்டினால் – மொய்க்கும்
ஈக்கள் போலக் கூட்டமே 3

முகத்தில் உணர்ச்சி கூட்டினால் – எந்த

மூடன் வருகை காட்டுவான்?
அகத்தில் உணர்ச்சி ஊட்டினால் – கூட்டம்
ஆட்டு மந்தை காட்டுமே 4

பெண்மை நாணம் பேசினால் – எங்கள்
பேரும் புகழும் வீசுமோ?
உண்மை கண்டு கூசுவோம் – எங்கள்
உலகம் யாவும் பாசமே 5

வீணிற் பண்பு செப்பினால் – நாங்கள்
விசிறி சேர்ப்ப தெப்படி?
நாணம் மானஞ் செப்பினால் – நாங்கள்
நடிகை யாவ தெப்படி? 6

கலைகள் கலைகள் என்றெலாம் – சொல்லும்
கதையை நீங்கள் நம்பலாம்
கலையும் ஆடை ஒன்றலால் – வேறு
கலையின் சாயல் கண்டிலோம் 7

கலையின் நுண்மை கற்றுளார் – வாழக்
கையில் என்ன பெற்றுளார்?
உலகம் எங்கள் கையிலே – மக்கள்
உள்ளம் எங்கள் மெய்யிலே 8

---

**பாடற் குறிப்பு:–** 7.10.1975 ஆம் நாள் பாடியது.

## 13. மண் குதிரை
**(நூல்:–பாடுங் குயில்)**

திரைப்பட மாவுன் வழிகாட்டி – [1]பேழ்வாய்த்
திமிங்கல மாவுன் படகோட்டி?
நரிக்குண மாஇத் திருநாட்டில்? – விட்டால்
நடைப்பிண மாக்கும் குழிகாட்டி 1

உருப்படி மாற்ற வழிகாட்டும் – வேண்டா
ஒப்பனை செய்ய வழிகாட்டும்
உருப்பட வாநல் வழிகாட்டும்? – பண்பை
ஒழித்திட வன்றோ வழிகாட்டும்! 2

நிலைத்திடு மா[2]மண் பரியாற்றில்? – நீந்த
நினைத்தனை யாயின் தடுமாற்றம்
உலர்த்திய மீனைப் புனலாற்றில் – விட்டால்
உயிர்த்தெழு மென்றா அதையேற்றாய்? 3

கவர்ச்சியில் ஓங்குங் கலைகாட்டி – உன்னைக்
கவிழ்த்திடப் பார்க்கும் வலைநீட்டி
தவிர்த்திடு தோழா! மனையாட்டி – போலத்
தலைப்படு வாளா விலையாட்டி? 4

---

**பாடற் குறிப்பு:–** 8.10.1975 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–**
1. பேழ்வாய் – பெரிய வாய். 2. மண்பரி – மண்குதிரை.

## 14. நல்ல நேரம்
**(நூல்:–பாடுங் குயில்)**

இதுதான் நல்ல நேரம் – சோம்பி
இருந்திடின் தம்பி துயர்வந்து சேரும்

—இதுதான்

எதுதான் இருப்பினும் இடர்தான் தடுப்பினும்
புதுநாள் படைத்திடப் புலியே புறப்படு

—இதுதான்

இளமையை வீணே செலவிடல் நன்றோ?
இதுபோல் பருவம் இனிமேல் என்றோ?
வளமையைக் கல்வி வழங்கிடும் நன்றே
வளர்ந்தால் நின்னை வாழ்த்திடு மன்றே

—இதுதான்

வைகறை ஒன்றே கற்றிடத் தோது
வாய்ப்பிதை விட்டால் வந்திடும் தீது
வைகலும் சென்றே பள்ளியில் ஒது
வாய்மொழி கேட்டால் வெற்றிதப் பாது

—இதுதான்

## 15. மனம்போல் விளையாடு

(நூல்:—பாடுங் குயில்)

வந்ததை எழுது கண்டதை உளறு
வளரும் புதுமையில் அதுதான் பாடலடா
சந்தையில் இலக்கணம் சரிவரத் தெரிந்தவர்
தவறியும் இல்லை அதனால் ஏடெடுநீ

தெரிந்தவ ரிருப்பினும் தென்புடன் எழுந்தே
செப்பிட மாட்டார் அதனால் பாடிடுநீ 1

புகழ்வாய் ஒருநாள் இகழ்வாய் மறுநாள்
புண்படப் பாடுக அதுதான் பொருள்தருமாம்
இகழினும் புகழினும் இருகை ஒலியால்
ஏற்பவர் மிகப்பலர் அதனால் புகழ்பெறுவாய்

பண்புகள் உணர்ந்தவர் பார்தனில் அருகினர்
பயப்பட வேண்டாம் அதனால் கவிதருவாய் 2

முதல்நாள் ஒன்றும் மறுநாள் ஒன்றும்
முரண்படப் பேசுக அதுதான் அரசியலாம்
இதுதான் முறையா எனவுனைக் கேட்டால்
இதுவே அரசியல் என்றே உரைசெயலாம்

ஏனெனில் அரசியல் தெரிந்தவர் இல்லை
இருப்பினும் துணியார் எனவே பறையறைவாய் 3

கயமைகள் செய்வாய் செய்தவை எல்லாம்
கரவா துரைப்பாய் அதுதான் நலந்தருமே
நயமுடன் உண்மை நவின்றனை என்றே
நாடுனைப் போற்றும் அதனால் விளம்பரமே

சொல்லையும் செயலையும் ஒப்பிடத் தெரிந்தவர்
சொல்லவும் மாட்டார் அதனால் முழங்கிடுவாய் 4

களிமயக் குறுவாய் கன்னியர் நுகர்வாய்
கடவுளின் பேரைக் கலந்தால் போதுமடா
எளியவர் மாந்தர் எதனையும் ஓரார்
எதுநீ சொலினும் அதுதான் வேதமடா

மடமையில் மூழ்கி மதியை மறந்தவர்
வாழ்தலி னாலுனை உலகே சூழுமடா 5

---

**பாடற் குறிப்பு:—** 20—11—1976 ஆம் நாள் பாடியது.

## 16. படியாத பிள்ளை
(நூல்:–பாடும் குயில்)

சொன்னபடி கேளாத பிள்ளை – பெற்றால்
தொடருவது தந்தைக்கு மாறாத தொல்லை
முன்னுணர்ந்து பாராமல் அன்று – காதல்
மூழ்கித் திளைத்தபயன் காணுகிறான் இன்று 1

படியென்று சொன்னாலுங் குற்றம் – நல்ல
பண்போடு நடவென்று சொன்னாலுங் குற்றம்
முடிவென்ன தெரியாது நாளை – வாழ்வில்
முன்னேற வழியேது படியாத காளை 2

ஊர்சுற்றி ஊர்சுற்றி வந்தால் – வாழ்வில்
உண்டாகும் பயனென்ன பெற்றமனம் நொந்தால்?
வேர்விட்ட ஆல்வற்றி நின்றால் – தொங்கும்
விழுதன்றோ தாங்கிப் பிடித்திடல் நன்றாம் 3

நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு – கல்வி
நாடிப் படிக்காத வாழ்வன்றோ காடு?
தோட்டத்தைப் பாழாக்கி நின்றால் – ஊரார்
தூற்றிப் பழித்துக்க தைப்பார்கள் கண்டால் 4

குற்றமது செய்கின்ற போது – தந்தை
கூறா திருப்பானோ? ஈ தென்னதீது?
பெற்றவர்கள் கண்டித்து நின்றால் – என்ன
பிழைவந்து நேருமவர் சொன்னபடி சென்றால்? 5

தாய்தந்தை காட்டுகின்ற சீற்றம் – பிள்ளை
தற்காத்துக் கொள்ளத்தான் வேறென்ன மாற்றம்?
நோய்பற்று முன்னேதெ ரிந்து – தாய்
நூறிக்க ரைத்துக்கொ டுப்பாள்ம ருந்து 6

ஐந்திலே படியாத பிள்ளை – கூட்டில்
அடைத்துக் கிடக்கின்ற பேசாத கிள்ளை
நைந்திருளில் மூழ்குமே வாழ்வு – விடியல்
நாளைக்குத் தோன்றுமோ? ஏனிந்தத் தாழ்வு? 7

பயிர்செய்யுங் காலத்தில் நட்டால் – நல்ல
பலன்கிட்டும்; என்னாகும் பருவத்தை விட்டால்?
அயராதிப் போதேமு யன்றால் – நன்மை
ஆடிப்பெருக் கெனவே ஓடிவரும் அன்றோ? 8

---

**பாடற் குறிப்பு:–** 31.12.78 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. நூறி – அரைத்து.

## 17. கற்பவர் செயலா?
(நூல்:–பாடும் குயில்)

கட்டிளங் காளையரே –உம்மைக்
  கண்டிடும் வேளையிலே
மட்டிலா வேதனையால் – உள்ளம்
  வாடிக் கலங்குகின்றேன் 1

நட்ட நடுத்தெருவில் – நீங்கள்
  நாலைந்து பேர்கலந்து
கட்டுக் கடங்காமல் – நின்று
  கத்திப் பிதற்றுகின்றீர்! 2

ஏறிய வண்டிகளில் – நீங்கள்
ஏழெட்டுப் பேர்நெருங்கிக்
கூறும் வரிசையிலே – தோளைக்
கோத்துத் திரிந்திடுவீர்! 3

பேருந்தில் ஏறிவிட்டால் – அங்கே
பேயாட்டம் ஆடுகின்றீர்
ஆரும் வெறுத்திடவே – நீங்கள்
ஆர்த்து முழக்குகின்றீர்! 4

நாடக வேடங்கள்போல் – தலையில்
நார்முடி காட்டுகின்றீர்!
ஆடவர் பெண்டிரெனத் – தோன்றா
ஆடையை மாட்டுகின்றீர்! 5

அன்ன நடையினர்தாம் – செல்லும்
ஆவண வீதிகளில்
என்னென்ன வேடிக்கைகள் – செய்வீர்
ஏளனக் கூக்குரலால் 6

மங்கையர் வீதிகளில் – நடந்து
வந்திட அஞ்சுகின்றார்
உங்க ளுடன்பிறந்த – பெண்ணும்
உண்டென எண்ணிடுவீர்! 7

கற்பவர் செய்கையிதோ – நாட்டைக்
காப்பவர் நீவிரன்றோ?
நெற்பயிர் காண்வயலில் – களைகள்
நீக்கிட முன்வருவீர்! 8

---

**பாடற் குறிப்பு:–** 8.2.1979 ஆம் நாள் பாடியது.

## 18. நெஞ்சு பொறுக்குதில்லையே

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

எங்கெங்குக் காணினும் தீமையடா – உல
கெங்கணும் வாய்மைகள் ஊமையடா
அங்கங்கு வாழ்பவர் எள்ளினரே – குணம்
அத்தனை யுங்கொண்டு தள்ளினரே
தங்கடன் செய்வதில் தூங்குகிறார் – மனச்
சான்றுகள் கொய்யவே ஏங்குகிறார்
இங்கவர் நல்லவ ராவதெந்நாள்? – கெடும்
எண்ணங்கள் யாவுமே போவதெந்நாள்? 1

பிஞ்சு மனத்தவ ராகினுமே – கலை
பேணி முதிர்ந்தவ ராகினுமே
வஞ்சியர் ஆடவர் யாவருமே – படும்
வாழ்வு மலர்ந்திடத் தீவினையே
அஞ்சில ராகியே கூட்டுகின்றார் – அந்தோ
ஆசையில் நேர்மையை வாட்டுகின்றார்
நெஞ்சு பொறுப்பதற் கில்லையடா – இந்த
நிலைகெட்ட மாந்தரால் தொல்லையடா 2

ஆறறி வுள்ளவர் மாந்தரடா – விலங்
காகிட ஏன்மனம் சாய்ந்ததடா?
சோறது பெற்றிடத் தாழ்ந்தனரே – மனத்
தூய்மையை விற்றிட வீழ்ந்தனரே
மாறிய போக்கினைக் கற்றனரே – உயர்
மான வுணர்ச்சியைச் செற்றனரே
கூறிய நீதிகள் எவ்வளவோ – அவை
கூறுவர் மேடையில் அவ்வளவே 3

தந்நலம் ஒன்றையே தேடுகிறார் – அதைச்
    சட்டமென் றாக்கிட நாடுகிறார்
என்னதான் செய்யினும் நெஞ்சினிலே – முனம்
    ஏற்றுகி றாரவர் வஞ்சனையே
பன்னிய நல்லறம் நீக்கினரே – மனப்
    பண்புகள் யாவையும் போக்கினரே
இந்நிலை கண்டுளம்  வாடுகிறேன் அதை
    எற்றித் துவைத்திடப் பாடுகிறேன் 4

எங்கெது காணினும் வஞ்சமடா – அதை
    எப்படித் தாங்கிடும் நெஞ்சமடா
இங்கெவர் போக்கிலும் குற்றமடா – இதை
    எண்ணிடும் போதெலாம் செற்றமடா
எங்கணுங் கீழ்மையைச் சாடிடுவேன் – மனம்
    ஏற்றம் பெறக்கவி பாடிடுவேன்
பொங்குக பண்புகள் பொங்குகவே – நலம்
    பூத்துப் பொலிந்துவி ளங்குகவே 5

நாயினுங் கீழென வாழ்வதுவோ – திரு
    நாட்டின் பெரும்புகழ் சாய்வதுவோ?
ஈயென எங்கணுந் தோய்வதுவோ? – மனம்
    ஈனத் தனத்தினிற் பாய்வதுவோ?
போயெதிர் காலத்தை நோக்குகிறேன் – மனம்
    புண்பட்டுப் போவதால் தாக்குகிறேன்
வாயினை எப்படி மூடிடுவேன்? – உயர்
    வாய்மையைக் காத்திடப் பாடிடுவேன் 6

நாளைய நாடுன தாட்சியிலே – என
    நாடி நடந்திடு மாட்சியிலே
காளையே தீமையைக் காய்ந்துவிடு – பல
    கற்றவர் நூல்களை ஆய்ந்துபடி
தோளினைப் பாரினில் தூக்கிநட – வரும்
    தோழனே கீழ்மையைத் தாக்கிவிடப்
பாளைச் சிரிப்பினைக் காட்டிடுவாய் – அதிற்
    பண்புகள் யாவையும் ஊட்டிடுவாய் 7

தீய குணங்களைத் தூக்கிஎறி – அது
    தெள்ளிய நாட்டினைக் காக்கும் நெறி
தூய மனத்தினைப் போற்றிநட – பொதுச்
    சொத்தினைக் கண்ணெனக் காத்துநட
சேயுன தன்னையின் நாடுயர – மனச்
    செம்மையைக் காத்திடப் பாடுபடு
தாயக மேன்மையை ஆக்கிவிடு – வளர்
    தம்பிஎன் வேதனை நீக்கிவிடு 8

## 19. நெஞ்சத் துடிப்பு
**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

விழிசுமந்த அருளாலே வருவோர்க் கெல்லாம்
    விருந்தளித்தோம் வரவேற்றோம் நட்புங் கொண்டோம்;
வழிசுமந்த பண்பாடு தமிழர்க் கென்றே
    வாய்நிறையப் புகழ்ந்துரைத்தார் மகிழ்ந்தோம்; ஆனால்
எழில்சுமந்த என்நாட்டார் வந்தோர்க் கெல்லாம்
    ஏமாந்து குனிகின்ற பித்த ராகிப்
பழிசுமந்து போனாரே என்ற போது
    பதைபதைக்கும் துடிதுடிக்கும் எனது நெஞ்சம் 1

நல்லவர்யார் கெட்டவர்யார் என்ப தோரார்;
    நலிவகற்றி நலந்தந்து நாட்டை யாள
வல்லவர்யார் அல்லவர்யார் அதுவும் தேரார்;

வாயினிக்கப் பேசுவதை நம்பு கின்றார்;
மெல்லியலோர் மின்மினியை ஒளிவி ளக்கா
மேடைதனில் வைத்துவிட்டார்; இதனைச் செய்தார்
மெல்லியலார் என்றுரைப்பர்; ஆண்க ளென்ன
விதிவிலக்கா? இதையெண்ணித் துடிது டித்தேன் 2

'சாதிகளே இல்லையடி பாப்பா நம்முள்
தாழ்வுயர்வு சொல்லுதலே பாவம்' என்றே
ஓதியஓர் பாரதியும் செத்துவிட்டான்
உட்புகுந்த சாதிகளோ சாக வில்லை;
'வேதியர்கள் தாம்வாழ வகுத்து வைத்த
வேதநெறி திராவிடத்தில் தூள் தூள்' என்று
மோதினன்நம் பாவேந்தன்; வீதி தோறும்
முளைப்பதலால் தூளாக வில்லை யிங்கே! 3

ஒருருவம் இல்லாத கடவுள் பேரால்,
ஒவ்வாத பகைமூட்டும் மதத்தின் பேரால்,
சீரழிவு பெற்றுவரும் சமுதா யத்தைச்
செப்பனிட வந்தஒரு பெரியார் இங்கே
ஆறறிவுப் போர்தொடுத்து மாண்ட பின்பும்
அர்த்தமிலா எந்தமதம் மாண்ட திங்கே?
ஆரவர்போற் போராட வல்லார்? இன்னும்
அழிவகல வில்லையெனத் துடிது டித்தேன் 4

'சாதிஎனச் சமயமென முளைத்து வந்த
சழக்குகளை விட்டுவிட்டேன்' என்று கூறி
மேதினியில் மறுமலர்ச்சி காண வந்த
மேன்மைமிகும் இராமலிங்கர் அருட்பா நூலை
ஓதிவரும் தொண்டருக்குப் பஞ்ச மில்லை;
சழக்குகளை ஒழிக்கத்தான் நெஞ்ச மில்லை;
யாதினிநாம் செய்வதென எண்ணி எண்ணி
அகமெல்லாம் துடிதுடிக்கும் வெம்பும் சோரும் 5

முடிவளர்ப்பர் புதர்முளைத்த செடிகள் போலே;
முகம்மறைப்பர் மூக்குக்கண் ணாடி யாலே;
அடிமறைக்கும் தொளதொளத்த காலின் சட்டை
அணிந்திருப்பர் பூப்பொறித்த மேலின் சட்டை;
[1]படிமறப்பர், [2]நடைமறப்பர், தெருவிற் செல்லும்
பாவையரை வழிமறைப்பர், கூத்த டிப்பர்;
குடிகெடுக்கும் காளைகளைக் காணும் போது
குமுறிமிகத் துடிதுடிக்கும் எனது நெஞ்சம் 6

எதிர்காலம் இவர்கையில் என்று நம்பி
இருக்கின்றார், நிகழ்காலப் பெரியோர்; ஆனால்
உதிர்காலம் போலன்றோ இளைஞர் வாழ்க்கை
உருள்கிறது; தளிர்காலம் வருமா என்னும்
புதிர்கோலம் இடுவதனால் எனது நெஞ்சம்,
பொழிபனியின் குளிர்கால நடுக்கம் போல
விதிர்விதிர்க்கும்; துடிதுடிக்கும் அவர்தம் நெஞ்சில்
விடிகாலம் அரும்பிவரும் காலம் என்றோ? 7

புதியஅலை எனும்வலையை வீசி விட்டால்
பொருள்பெருகும் புகழ்வளரும் என்று நம்பி
மதிதவறி எழுத்தாளர் வீழ்ந்து விட்டார்;
மனமயக்கம் தருகின்ற காமச் சாற்றைப்
புதுமுறையிற் பிழிந்தெடுத்து வார்த்து வைத்துப்
புத்தகங்கள் பத்திரிகை எழுதி விட்டார்;
கதையிதுவா? கலையிதுவா? இளைய நெஞ்சம்
கருகிவிடும் வழியன்றோ எனத்து டித்தேன் 8

நல்லறிவைப் பண்பாட்டை ஒழுக்கந் தன்னை
நாகரிகக் கலைவளத்தை விஞ்ஞா னத்தைச்
சொல்லுதற்குப் படைப்பாற்றல் கொண்டோன் கையில்;
சுழல்கின்ற கோலொன்றே எழுது கோலாம்;

புல்லறிவால் பொருள்பெருக்கல் ஒன்றே நோக்கிப்
புழுத்ததெலாம் வரையுங்கோல் கன்னக் கோலாம்;
நல்லறிவைக் கெடுத்துமிகப் பொருள்ப றிக்க
நன்மைக்கே தீவைக்கும் நெருப்புக் கோலாம் 9

மறைப்பிடமே இல்லாமல் சதையைக் காட்டி
மதர்ப்புடனே நடிக்கின்ற மங்கை நல்லார்
கறைப்படுமே பண்பாடென் றெண்ணா ராகிக்
கன்னத்தை வாடகைக்கு விட்டால், மீண்டும்
தரப்படுமே நடிப்பதற்கு வாய்ப்பென் றெண்ணித்
தரங்கெட்ட காட்சிகளில் நடித்துக் காட்டும்
திரைப்படங்கள் வளர்வதற்கிங் கிடங்கொடுத்தால்
தெருப்புழுதி போலாகும் மக்கள் நெஞ்சம் 10

கற்பழிப்பு, களவாடல், கடத்தல் என்ற
கயமைஎலாம் கற்பிக்கும் கதைகள், கெட்ட
சொற்பெருக்கம் கொண்டொழுகும் காமப் பாட்டு,
துள்ளிவரும் நடனமெனப் பேயின் ஆட்டம்,
மற்போர்கள் செய்வதுபோல் காதற் காட்சி,
மாமேதை இயக்குநர்கள் திறமை, எல்லாம்
கற்போர்கள் நெஞ்சத்தைக் கெடுப்ப தல்லால்
கடுகளவு நலமேனும் தருவ துண்டோ? 11

எதைக்கண்டு துடிப்பதடா? அந்தோ இங்கே
எதைக்கண்டு கொதிப்பதடா? தமிழர் நாட்டில்
பதைக்கின்ற நிலையல்லால் அமைதி யில்லை;
பைந்தமிழின் நிலைகாணின் நெஞ்சே வேகும்;
மிதிக்கின்ற வழிதேடி வடபு லத்தார்
மெல்லமெலப் புகுகின்றார்; இந்தி கொண்டு
வதைக்கின்ற வழியமைத்து வருதல் கண்டேன்
வடவர்பிடி எத்தனைநாள்? எனத் துடித்தேன் 12

இல்லத்தார் துடிதுடிக்க, மாலையிட்ட
இல்லாளும் துடிதுடிக்கப் பெற்ற பிள்ளை
சொல்லத்தான் முடியாமல் துடிது டிக்கச்
சூழ்ந்தஉயிர் அணுவெல்லாம் துடிது டிக்க
மெல்லத்தன் உயிர்த்துடிப்பே அடங்கும் வண்ணம்
மேனியிலே எரியூட்டிக் கொண்ட தோழர்
வெல்லத்தான் மொழிப்போரில் தமைக்கொ டுத்தார்
வியப்புமிகும் அத்துடிப்பே இன்றும் வேண்டும் 13

துடிக்கட்டும் உமதுமனம்; தமிழ்மொ ழிக்குத்
துளியேனும் பகைவருமேல் தூள்தூ ளாக
வெடிக்கட்டும் அப்பகைமை; தமிழர் நெஞ்சம்
விழிக்கட்டும்; இந்திமொழி ஆதிக் கத்தை
முடிக்கட்டும் இன்றோடு; கூடி எங்கும்
முழங்கட்டும் தமிழ்முழக்கம்; தமிழர் கைகள்
அடிக்கட்டும் போர்முரசு; பகைவர் கூட்டம்
அலறட்டும் சிதறட்டும் அஞ்சி நின்றே 14

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. படி – பூமி. 2. நடை – ஒழுக்கம்.

## 20. அச்சு முறிந்தால்

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

சாதியின் பேரைச் சொல்லிச்
சார்ந்திடுங் கட்சி சொல்லி
ஓதிடுங் கல்வி கற்போர்
உறுபகை கொண்டோ ராகி
மோதினர் என்ப தாலே
மூடினர் கல்விக் கூடம்;

காதிலிச் செய்தி வந்து
    கனலெனப் பாய்ந்த தம்மா! 1

கற்கவோ வந்தீர்? அன்றிக்
    கலவரஞ் செய்து வீதி
நிற்கவோ வந்தீர்? நாளை
    நிகழ்ந்திடும் நன்மை யாவும்
விற்கவோ வந்தீர்? நீவிர்
    விளைத்திடும் தீமை சொல்லச்
சொற்களே இல்லை இல்லை
    துடிக்கிறேன் நெஞ்சம் நொந்து 2

கற்றிட அரசு நல்கும்
    காசெலாம் பாழே யாக்கிப்
பெற்றவர் பட்ட பாட்டைப்
    பேணிய கனவை யெல்லாம்
முற்றவும் வீணே யாக்கி
    முழுமதி தேய்த்து விட்டாற்
பிற்றைநாள் வாழ்க்கை தன்னைப்
    பேரிருள் கவ்வு மன்றே? 3

படித்திட வந்த நீவிர்
    பண்பினை மறந்து விட்டுக்
குடித்திடக் கற்றுக் கொண்டீர்
    உரைக்கவுங் கூசு கின்றேன்
மடத்தினில் வீழ்ந்து நாளும்
    மயங்கியே திரியும் நும்மைத்
தடுத்திட வில்லை யென்றால்
    தறிகெட்டுப் போகும் நாடு. 4

திரிபறக் கற்றுப் பின்னர்த்
    தெளிந்தநல் லறிவு பெற்று
மருவிய பணிக ளேற்றும்
    மற்றவர் வணிகஞ் செய்தும்
அரசியல் சார்ந்தும் நாளை
    ஆள்பவர் பழுது பட்டீர்
திரிதருந் தேரின் அச்சு
    தெறித்திடின் நிலையென் னாகும்? 5

அடித்தளம் சிதையு மாகின்
    ஆங்கொரு மண்ட பந்தான்
படைத்திட யாரால் ஒல்லும்?
    பண்பினை மறந்தே ஆடும்
தடித்தனம் தவிர்ப்பீர் இன்றே
    நுங்கடன் தலைமேற் கொள்வீர்
நடைப்பிண மல்ல நீவீர்
    நாட்டினைக் காக்கும் வீரர் 6

படிப்பதற் கேற்ற நல்ல
    பருவத்தைப் பாழிற் போக
விடுத்திடின் அதுதான் நாளை
    மீளுமோ? விளையும் நேரம்
கடித்திடும் விட்டில் வீழ்ந்தால்
    களஞ்சியம் நிரம்பு மோஎன்
றடிக்கடி எண்ணு வீரேல்
    அடையலாம் நலங்கள் யாவும் 7

அடிக்கடி ஆசான் சொன்னால்
    அடிமையா நாங்கள் என்பீர்
படித்திடப் பெற்றோர் கூறின்
    அதற்கும்நீர் படிவ தில்லை
தடுத்திடும் சான்றோர் சொல்லை
    எள்ளியே தள்ளு கின்றீர்
அடுக்குமா இந்தப் போக்கு

வாழ்வையே அழிக்கு மன்றோ? 8

## 21. வகுப்பறையும் மாணவரும்
**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

"வகுப்பறையா? கொலைக்களமா? இல்லை யில்லை;
வாய்ப்பூட்டுச் சட்டங்கள் உலவும் மன்றம்;
நகைத்துவிளை யாடுகிற சுதந்தி ரத்தை
நசுக்குகிற உலைக்கூடம்; உரிமை யாவும்
தகர்க்கின்ற சம்மட்டி வைக்குங் கொட்டில்;
தடையின்றிப் பறக்கின்ற உணர்வை எல்லாம்
தகைக்கின்ற கிளிக்கூடு; கதவும் பூட்டும்
தாங்காத சிறைச்சாலை; அடிமைச் சாலை." 1

"உயர்கல்வி பயில்கின்ற சாலை என்பார்
உணர்ச்சிகளைப் பிழிந்தெடுக்கும் ஆலை யாகும்;
அயர்வகல நிழல்நல்கும் சோலை என்பார்
அயர்வுடனே வெம்மைதரும் சாலை யாகும்;
துயரகலும் கலைபயின்றால் என்பர் தேர்வுத்
தொல்லைகளாற் கலங்கவைப்பர்; கல்லூரிக்குப்
பெயர்வரவே எம்மைஎலாம் கட்டுப் பாட்டின்
பேர்சொல்லி அடிமைஎன அடைத்து வைப்பர்." 2

"எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்பார்
எமைமட்டும் அடிமைகளின் சின்னம் என்பார்;
கல்லாரும் மயங்குமிசைத் தட்டுப் பாட்டைக்
காதுகளில் பாயவிடும் நேரம் பார்த்துச்
சொல்லாருந் தமிழ்மொழியாம் கணக்காம் ஏதோ
துணைமொழியாம் அறிவியலாம் இப்படித்தான்
பொல்லாத பாடமெலாம் பாய்ச்சு கின்றார்
பொறுமையுடன் கேட்பதற்குச் சிலையா நாங்கள்?" 3

"வேளைதொறும் கல்விதரும் ஆசான் எங்கள்
விளையாட்டுச் சிறுபொம்மை; வகுப்போ நாங்கள்
ஆளயரும் பொழுதத்துச் சடையைக் கட்டி
ஆடைகளில் முடிச்சிட்டுக் களிக்கும் மேடை;
காளையரும் மங்கையரும் அகத்து றைக்குள்
களவியலை ஒத்திகைபார்த் திருக்குங் கூடம்;
தோளுயரும் பொழுதத்தில் ஆசா னோடு
தொடுக்கின்ற போர்நடத்தும் களமும் ஆகும்." 4

மாணவர்கள் இவ்வண்ணம் உரைப்ப ரானால்
மதிநலந்தான் உருப்படுமா? நாட்டின் மேன்மை
காணவரும் நாள்வருமா? இந்த மண்ணில்
கல்விவளந் தான்பெறுமா? படிப்ப தற்குப்
பூணழகுப் பொருள்விற்றுக் காடு விற்றுப்
பொருளனுப்பி எதிர்கால ஒளியை நம்பிக்
காணஎதிர் பார்த்திருக்கும் பெற்றோர் நெஞ்சம்
களிப்புறுமா? விடிவெள்ளி அங்கா தோன்றும்? 5

## 22. நூலகமும் மாணவரும்
**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

புகுதற்குத் தகுதியிலா இடமே என்று
புந்திதரும் நூலகத்தை ஒதுக்கி விட்டீர்;
நகுதற்கும் ஆடலுக்கும் மனத்தைத் தந்தோர்
நாடிவரின் பலனில்லை; அறிவு வேலைத்
தகதகக்கக் கூர்ப்படுத்துஞ் சாணைக் கற்கள்
சாருமிடம்; அறியாமைப் பகையை மாய்க்கும்

தகுதிபெற, நுழைபுலமும் கூர்மை யாகத்
    தகுதியுடன் பதமாகச் செய்யுஞ் சாலை 1

ஒருமையுடன் நூலகத்துள் நுழைதல் வேண்டும்;
    உயர்ந்தகலை நூல்பலவும் படித்தல் வேண்டும்;
பெருமைதரும் நூலதனைப் படிக்கும் போது
    பேச்சின்றிப் புறவழியில் நாட்ட மின்றிப்
பொறுமையொடு கண்ணூன்றிக், கருத்தும் ஊன்றிப்
    புத்தகத்து நல்லமுதைப் பருகல் வேண்டும்;
பெறுபொழுதை இவ்வண்ணம் பயன்ப டுத்திற்
    பெருமைஎலாம் வழிவினவி வந்து சேரும். 2

பெறற்கரிய பருவமிது; பெற்ற ஒன்றைப்
    பெருநெறியில் நல்வழியில் பயன்படுத்தின்
உறற்கரிய உயர்வெல்லாம் உம்மைச் சேரும்
    உமதறிவால் நாட்டுக்கும் நன்மை சாரும்;
குறட்கருத்தை ‘சாந்துணையும் கற்க’ என்ற
    கோலமொழி தரும்பொருளை நூல கந்தான்
தரற்குரிய இடமாகும்; பொழுதை எல்லாம்
    தக்கபடி பயன்படுத்திப் பெருமை கொள்க. 3

அன்பருடன் நகைமொழிகள் பலவும் பேசி
    அரட்டையடித் தலைவதுதான் பொழுது போக்கா?
நண்பருடன் திரைப்படங்கள் பார்த்து விட்டு
    நடுத்தெருவில் திரிவதுதான் பொழுது போக்கா?
என்பெருமை கண்டீரோ? பொழுதை எல்லாம்
    இவ்வண்ணம் போக்கடித்தால் பயனே இல்லை;
மின்பொழுதும் வீணின்றி நூல்ப டித்து
    மேம்படுக, பருவத்தே பயிரைச் செய்க 4

உலகரங்கில் அரசியலில் தனித்து நின்ற
    ஒருமனிதர் இராசகோ பாலர் என்பார்
நிலவுபுகழ் மூதறிஞர் எனவு யர்ந்தார்;
    நிகரில்லாப் பேச்சாளர், எங்கள் நெஞ்ச
மலருறையும் பண்பாளர், காஞ்சி அண்ணா
    வான்புகழின் உச்சிக்கே சென்றார் என்றால்
குலவுபுகழ்ச் சென்னைநகர்க் ‘கன்னி மாரா’
    நூலகத்தை ஏணியெனக் கொண்டே யன்றோ? 5

## 23. ஒப்பனையும் மாணவரும்

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

பாடலெது? உரைநடைதான் எதுவென் றிங்குப்
    பகுத்துணர இனமுணர இயலா வண்ணம்
மேடையிலே முழங்குவதைக் கேட்டுக் கேட்டு
    மெல்லியஎன் உள்ளமெலாம் நைந்து நைந்து
வாடுகிறேன்; அதுபோலக் கல்வி கற்க
    வருபவர்தம் ஒப்பனையால் அவர்த மக்குள்
ஆடவர் யார்? மகளிர் யார்? தோற்றத் தாலே
    அடையாளந் தெரியாமல் மயங்கு கின்றேன். 1

பிடர்வரையில் தொங்குகிற முடிகள் வாரிப்
    பேணாமல் சிதறுண்டு முகம்ம றைக்கும்;
தொடர்ந்துவரும் தமிழ்வீரந் தாழ்ந்து விட்ட
    துயரத்தைத் தொங்குகிற மீசை காட்டும்;
அடர்செடிகள் விலங்கினங்கள் பொறித்த சட்டை
    [1]அடவியில்வாழ் மாந்தரையே நினைவிற் கூட்டும்;
இடையணிந்த தொளதொளத்த காலின் சட்டை
    இருக்கின்ற தூசியெல்லாம் தெருவில் கூட்டும் 2

முகமதிய ரானவர்தாம் கைலி என்று
மூட்டிவைத்த ஆடைதனை உடுத்திக் கொள்வர்;
[2]முகமதிய ரானவரும் பயிலும் போது
முற்போக்கென் றதனைத்தான் உடுத்து கின்றார்;
பகலிரவில் எவ்விடத்தும் கைலி யைத்தான்
பகட்டாக மாணவரும் உடுத்து கின்றார்;
நகைமொழிக்குக் கூறவில்லை; அம்ம தத்து
நாடாக்க அவரெல்லாம் நினைந்தார் போலும். 3

நலங்கோலம் செய்கின்ற பருவம் ஈது
நாகரிக உடையணியும் பருவம்; ஆனால்
அலங்கோலஞ் செய்தன்றோ உலவு கின்றார்;
அழகுக்குப் பொருளொன்றும் விளங்க வில்லை;
[3]நலங்காத புறக்கோலம் செய்தல் ஒன்றோ
நன்மைதரும்? அகக்கோலம் வேண்டு மன்றோ;
நலங்காணும் நாட்டத்திற் சொல்லு கின்றேன்
நாகரிக வளங்காண முயல்க நன்றே. 4

---

**அருஞ்சொற் பொருள்:—**
1. அடவி — காடு. 2. முகம் மதியர் ஆனவரும் — மதி போன்ற முகமுடைய மகளிரும். 3. நலங்காத — கசங்காத.

## 24. அரசியலும் மாணவரும்
**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

படிக்கின்ற பருவத்தைக் கல்விக் கென்றே
பயன்படுத்திக் கொளல்வேண்டும்; அதைவி டுத்துத்
துடிக்கின்ற உணர்வுக்குத் தீனி யிட்டால்
தொலையாத துயரந்தான் மிஞ்சி நிற்கும்;
வெடிக்கிடங்கில் எவரேனும் நெருப்பை வைத்து
விளையாட நினைவாரோ? வேட்கை தீரக்
குடிக்கின்ற புனலூற்றை அடைத்து விட்டால்
கொடும்வறட்சி தோன்றுமலால் வளமா தோன்றும்? 1

அரசியலைக் கற்றுணரும் ஆர்வம் வேண்டும்;
அயல்நாட்டு நடைமுறையுந் தெரிதல் வேண்டும்;
புரையறுநூல் அறிவுவளம் பெற்ற பின்னர்ப்
புகுவார்க்கே அரசியலில் வெற்றி வாய்க்கும்;
அரைகுறையாக் கல்வியினை விட்டு, மேடை
அரசியலிற் புகுவதனாற் பயனே இல்லை;
பொருசமரில் படைக்கலங்கள் இல்லா மாந்தன்
புகுவானேல் புறமுதுகே காட்ட நேரும். 2

ஈரோட்டுப் பெரியார்தாம் என்ன கற்றார்?
ஈடில்லாக் கலைஞரவர் என்ன கற்றார்?
பாராட்டுப் பெற்றிலரோ? என்று கேட்பர்;
பயனில்லாக் கேள்வியிது; கல்லூ ரிக்குள்
பேரேட்டில் இவர்பெயர்கள் இல்லை; ஆனால்
பிழையின்றி இவர்கற்ற நூல்கள் எல்லாம்
ஓரேட்டில் அடங்காவே! அதனா லன்றோ
உலகவர லாற்றேட்டில் இடமும் பெற்றார். 3

பருவங்கள் பலவுண்டு மாந்த னுக்கு;
பருவநிலைக் கேற்றவணம் செயல்கள் வேண்டும்;
திருமணமும் மாந்தனுக்குத் தேவை; ஆனால்
சிறுபிள்ளைப் பருவத்திற் செய்தல் நன்றோ?
அறிவுவளர் கலைபலவும் பயிலும் பிள்ளை
அரசியலிற் புகநினைதல் முறைமை யன்று;
உறைதயிரில் வெண்ணெய்தனை எடுக்கு முன்னே
உருகியநெய் வேண்டுமெனிற் காண்ப துண்டோ? 4

அரசியலில் நூலறிவைக் கற்றுக் கொள்க

அதனாலே வரும்பயனைப் பெற்றுக் கொள்க
அரசியலில் போர்நுழைவை விட்டுச் செல்க
ஆன்றோரின் அறிவுரையைப் பற்றிச் செல்க
அரசியலைப் படிப்பதுதான் இந்த வேளை
அத்துறையைப் பிடிப்பதுவா உங்கள் வேலை?
அரசியலை உரமாக்கி வளர்தல் வேண்டும்
அரசியலாக் குரமாகி அழிதல் வேண்டா. 5

## 25. இதழ்களும் மாணவரும்

(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)

நூலகத்துப் புகுந்துவரக் கூசு கின்றீர்
[1]நோய்நுண்மம் போற்பரவும் இதழ்கள் தம்மைப்
பாலமுதம் எனவெடுத்துப் பருகு கின்றீர்
பகுத்தறிவைப் பாழாக்க முனைந்து விட்டீர்
காலையெனும் ஒருபொழுது விடியு முன்னே
கயமைமிகும் இதழ்களையே வாங்கு கின்றீர்
பாலுணர்வுக் கோப்பைக்குள் வீழ்ந்து வீழ்ந்து
படிக்கின்ற வண்டானீர் இளைஞர் இங்கே. 1

திரைபோட்டு நிகழ்த்துகிற செயலை எல்லாம்
திரைநீக்கி காட்டுகிறார் இதழ்கள் என்றே;
திரைநீட்டிச் சங்கத்து நூல்க ளெல்லாம்
தின்றாயே கொடுங்கடலே இவற்றை மட்டும்
இரையாக்கிக் கொள்ளாமல் இருக் கின்றாயே
எத்துணையோ பாடல்களைச் சுவைத்த தீயே
குறைகாட்டிப் பொருளீட்டும் இதழை மட்டும்
கொழுநாவால் தீண்டாமல் ஏன்வி டுத்தாய்? 2

அறிவியலை இந்நாட்டில் வளர்க்க எண்ணும்
ஆர்வத்தால் பொருள்கொட்டி இதழ்ந டாத்த
அறிஞர்சிலர் முன்வந்தார்; ஆனால் இங்கே
அவர்கண்ட பலனென்ன? இந்த மண்ணில்
அறிவியலே வளராது; களைக ளாக
அறியாமை மண்டுமெனக் கண்டு கொண்டார்;
நெறிவிலகி வந்துவிட்டோம்; கற்பா றைக்குள்
நெற்பயிரா விளையும்?'' எனஒதுங்கி விட்டார் 3

சிந்தனைக்கு வளர்ச்சிதரும் இதழ்கள், நல்ல
சீர்திருத்தக் கொள்கைதரும் இதழ்கள், ஆயும்
புந்திக்கு விருந்தளிக்கும் இதழ்கள், போற்றும்
பொதுமைக்கு வழிவகுக்கும் இதழ்கள் விற்க
முந்திக்கொண் டிங்கெழுந்து காலைப் போதில்
முனைப்போடு கடைவிரித்தார்; மாலை எனும்
அந்திக்குள் திறந்தகடை மூடி விட்டார்
அவைகொள்வா ரில்லாத கார ணத்தால் 4

நல்லறிவைப் பதப்படுத்தும் பருவத் துள்ள
நம்மிளைஞர் இவற்றையெலாம் புறக்க ணித்துப்
புல்லுணர்வைக் கிளறிவிடும் இதழ்கள் வாங்கிப்
போற்றுவிரேல் அறிவுநுனி மழுங்கிப் போகும்;
அல்வழியில் மனஞ்செல்லும்; பண்பு தேயும்;
அருமைமிகும் இளம்பருவம் கருகி வீழும்;
கல்வியது சருகாகிக் காற்றிற் போகும்;
காளையர்தம் பிஞ்சுள்ளம் வெம்பி வீழும். 5

---

**அருஞ்சொற் பொருள்:–** 1.நோய்நுண்மம் – நோய்க்கிருமி.

## 26. திரைப்படமும் மாணவரும்
**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

பண்பாடே சீர்குலைந்து போன தென்றால்
 படத்துறைதான் முதற்களமாம்; அதை நினைந்தால்
கண்பாடு கொள்வதற்கு மனமேயில்லை;
 கயமைகளின் விளைநிலந்தான் அந்தப் பூமி;
நண்பாலே உரைக்கின்றேன் இற்றை நாளில்
 நடிகர்யார் மாணவர்யார் தெரியவில்லை;
கண்போலக் காக்குமிளம் பருவந் தன்னைக்
 கயமைக்குள் கூத்தடிக்க விட்டு விட்டார் 1

நாளெல்லாம் படித்தவைதாம் நினைவில் நில்லா
 நடிகையின்பேர் நீங்காது நினைவில் நிற்கும்;
[1]கோளெல்லாஞ் சொல்கின்ற சாத கத்துக்
 குறிப்பெல்லாம் அகலாது நினைவில் நிற்கும்;
தேளெல்லாங் கொட்டியது போலி ருக்கும்
 தேர்வெனிலோ படித்தவையும் மறந்தே போகும்,
தோளெல்லாம் பூரிக்கும் திரைப்ப டத்தில்
 தொங்கவிட்ட 'ஏ' என்னும் எழுத்தைக் கண்டால் 2

படிப்புக்கு மதிப்பளிக்கும் காலம் நல்ல
 பண்புக்கு மதிப்பளிக்குங் கால மாகும்;
நடிப்புக்கு மதிப்பளிக்குங் காலம் இந்த
 நாட்டுக்கே தீங்கிழைக்குங் காலம்; தோகை
நடிப்புக்கு விழைகின்ற காலம் இங்கு
 நற்கலைகள் வளர்கின்ற காலம்; கோழித்
துடிப்புக்கு மயங்குகின்ற காலம் நாடு
 துறைமாறிப் போய்விட்ட காலம் ஆகும். 3

சிறந்திருந்த காலந்தான் இறந்த காலம்;
 சீர்களெலாம் நெகிழ்காலம் நிகழுங் காலம்;
வறந்திங்குப் பண்பெல்லாங் காய்ந்து வாடி
 வருங்காலம் உதிர்காலம் ஆகா வண்ணம்
திறங்கொண்டு மாணவர்காள் எழுக; உங்கள்
 திருநாட்டை விழிதிறந்து காண்க; உள்ளம்
திறந்திங்குப் பேசுகின்றேன் எதிர்கா லத்துத்
 திருவிளக்கை ஏற்றுவது நுங்கள் கையே 4

---

**அருஞ்சொற் பொருள்:— 1..** கோள்எல்லாம் — கிரகங்கள்.

## 27. பெற்றவர் தூங்கினால்...?
**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

கற்று வரச்சொல்லிப் போக்கினீர் — மக்கள்
 கற்றன ராவெனப் பார்க்கிலீர்
குற்றம் இழைத்திட நாடுவார் — கல்விக்
 கூடங்கள் தாக்கிடக் கூடுவார்
செற்றமு டன்கலாம் செய்யவோ? — அங்குச்
 சென்றனர் பிள்ளைகள் ஐயவோ!
பெற்றவர் இப்படித் தூங்கினால் — நாளை
 பின்விளை வென்னென்ன வாகுமோ? 1

மங்கையர் ஏகிடக் கூசுவார் — கற்கும்
 மாணவர் அப்படிப் பேசுவார்
எங்கணும் தேர்வுகள் காணுவோர் — நெஞ்சில்
 ஏக்கம் மிகுந்திட நாணுவார்
தங்கும் இடங்களில் போர்க்களம் — ஊர்தி
 சார்ந்திடும் போதிலும் போர்க்களம்
இங்கிவர் இப்படி ஏகினால் — நாளை
 எப்படி எப்படி யாகுமோ? 2

கண்டனம் இன்மையால் நேர்ந்ததோ – கல்விக்
கட்டணம் இன்மையால் சார்ந்ததோ?
சண்டை இடுங்கட்சி புக்கதோ – அன்றித்
தானெனும் ஆணவம் மிக்கதோ?
கண்டுளம் வேதனை கொள்கிறேன் – இந்தக்
காளையர் வாழ்ந்திடச் சொல்கிறேன்
மண்டிய தீமைகள் ஓங்குமே – பெற்றோர்
மற்றவர் போலினுந் தூங்கினால். 3

## 28. ஓடம் பழுதானால்.....?

(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)

அறிவொளி பெருக்கிக் காட்டி
அகவிருள் நீக்கும் ஆசான்
செறிதரும் இளைஞர் நெஞ்சிற்
செம்மையைப் புகட்டும் ஆசான்
நெறிதனைச் சுட்டிக் காட்டி
நேர்மையிற் செலுத்தும் ஆசான்
தெரிதரும் கடவுள் என்பேன்
தெய்வம்வே றில்லை என்பேன் 1

நாட்டினை உயர்த்திக் காட்டும்
நல்லதோர் பணியில் தம்மைக்
கூட்டினோர் தாமே இன்று
குறுநெறி நடந்தார் என்று
கேட்டதும் துடித்தேன் இந்தக்
கேட்டினை யாங்கு ரைப்பேன்;
மீட்டிட மேலே நிற்போர்
படுகுழி வீழ்தல் நன்றோ? 2

வாழ்ந்திட வழிகள் காட்டும்
வானுயர் பணியில் உள்ளீர்
வீழ்ந்திடக் குழிகள் காட்ட
விழைவதோ? ஆணி வேரைப்
போழ்ந்திடல் முறையோ? இந்தப்
புன்மையில் இறங்கி நீவிர்
ஆழ்ந்திட நினைந்த தேனோ?
ஐயவோ கொடுமை யன்றோ. 3

உருவமும் உடையும் உங்கள்
உயர்வினைக் காட்ட வில்லை;
பருவமும் பழகும் பாங்கும்
படிப்பினைக் காட்ட வில்லை;
ஒருவனும் குறைகள் சொல்லா
தொழுகுக இனிமே லேனும்;
கருவறை பழுது பட்டாற்
கையினிற் குழந்தை ஏது? 4

பாடங்கள் புகட்டும் பாங்கைப்
பையவே மறந்து போனீர்
கூடங்கள் திறவா வண்ணங்
கூடிநீர் தூண்டி விட்டால்
ஏடுங்கள் கையிற் கொண்டும்
என்னதான் பயனோ சொல்வீர்
ஓடங்கள் ஓட்டை யானால்
ஒல்லுமோ கரையைக் காண? 5

## 29. புலவர் குறிக்கோள்

(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)

புலவரெனும் மொழிசெவியிற் புகுந்திடுமேல்
 உள்ளமெலாம் பூரிப் பேன்நான்;
அலகில்புகழ் மன்னரையும் அவரெதிரில்
 இடித்துரைக்கும் அஞ்சா நெஞ்சர்
குலவிவரும் வறுமையிலும் கூடிவரும்
 பெருமிதத்திற் குன்றாச் செல்வர்
உலகுறினும் பழிபுரியார் உயிர்செலினும்
 நிலைகுலையார் உயர்ந்தே நிற்பார் 1

உலகினர்தாம் நெறிபிறழின் உளந்தரியா
 தறிவுறுத்தும் உரிமை யுள்ளார்
பலர்விழையுஞ் செயலெனினும் பழியென்றால்
 தடுத்துரைக்கும் பண்பு கொண்டார்
மலர்வருந்தா ததன்நறவை மகிழ்ந்துறிஞ்சி
 இசைபாடும் வண்டு போல்வார்
நிலவுலகில் தம்வாழ்வை நினைந்தறியார்
 பிறர்நலமே நெஞ்சிற் கொள்வார் 2

அத்தகைய பெயர்தாங்கும் ஆசான்மார்
 நிலைகாணின் அந்தோ நெஞ்சம்
பித்தாகி மயலாகிப் பேதுற்றுச்
 சுழல்கின்றேன் பேசும் நாவிற்
கொத்தாகி வரும்மொழியின் கூட்டத்தை
 நும்முன்னர்க் கொட்டு கின்றேன்
[2]எத்தாலும் பழிகளுமக் கேற்படுமேல்
 எனையுமவை சாரு மன்றோ? 3

பேசுங்கால் எழுதுங்காற் பிழைமலியக்
 காண்கின்றேன்; பிறழ்ந்து நாவை
வீசுங்கால் வரையுங்கால் வீணாவர்
 மற்றவரும்; விளைவைக் கண்டு
கூசுங்கள்; மாசுங்கள் மாதமிழ்க்குச்
 சேர்க்காதீர்; கோல வாழ்விற்
காசுங்கள் குறிக்கோளா? கசடறுதல்
 குறிக்கோளா? எதற்குக் கற்றீர்? 4

நாட்டவரைத் திருத்துதற்கு நல்லுரிமை
 பெற்றவர்நீர் நலிதல் நன்றோ?
வேட்டெழுந்து மற்றவரா விளக்கியுமைத்
 திருத்துவது? வெட்கம்! வெட்கம்!
நாட்டமுடன் முயன்றுரிய நலங்களெலாம்
 தகுதியெலாம் நயந்து கொள்க
[2]கோட்டமது தவிர்த்திடுக கொண்டிருக்கும்
 பொறுப்புணர்ந்து கொண்டாற் போதும். 5

இனவுணர்வை ஊட்டுவதும் மொழியுணர்வை
 ஏற்றுவதும் யார்பொ றுப்பு?
மனவுணர்வில் ஈருணர்வும் மதியுடையீர்
 நும்மிடமே வதிதல் காணேன்;
சினவுணர்வு கொள்ளாதீர்; சிறந்தபணி
 நமதன்றோ? சிந்தித் தாய்க;
எனவுமைநான் வேண்டுகின்றேன்; இனியேனும்
 பொறுப்புணர்க ஏற்றங் காண்க 6

நாளையுல காள்பவரை நமதுகையில்
 ஒப்படைத்தார் நாட்டு மக்கள்;
காளைகளைச் சிறுவர்களைக் கண்மணிபோற்
 காப்பதுநம் கடமை யாகும்;
வேளையிது தவறிவிடின் விளைநிலத்திற்
 களைகளலால் வேறு தோன்றா
[3]பூளையெனப் போகாதீர் புன்மைகளை
 நாடாதீர் புலவர் நீவிர். 7

பொறுப்புணர மறுப்பீரேல் புலவரெனும்
    பட்டத்தைப் பூணல் நன்றோ?
வெறுப்புடைய பேடிக்கு வீரனெனும்
    பேரெதற்கு? வேலெ தற்கு?
விருப்புடைய புலவர்பெயர் வேண்டுமெனிற்
    பெயர்க்கிழுக்கு விளையா வண்ணம்
கருத்துடன்நீர் காத்திடுக கடமைகளை
    ஆற்றிடுக காலம் வாழ்த்தும் 8

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. எத்தாலும் – எதனாலேனும்.
2. கோட்டம் – வளைவு குறைபாடு. 3..பூளை–பூளைப்பூ.

## 30. காசுக்கா நீதி?

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

வீதியிற் கடைச்ச ரக்கு
    விற்பனை யாதல் போல
நீதியை விலைக்கு விற்கும்
    நிலைமையைக் கூறக் கேட்டேன்
வேதனைத் தீயால் நெஞ்சம்
    வெந்திடப் பெற்றே னந்தோ!
கோதிலா இடத்திற் கூடக்
    கொடுமையா நிகழ்தல் வேண்டும்? 1

மாசறி யாத நீதி
    மன்றிலும் கையூட் டென்னும்
காசுதான் தீர்ப்பை வாங்கும்
    கயமையைக் காதாற் கேட்டேன்
கூசினேன்; அவர்க்குத் தூக்குத்
    தண்டனை கொடுப்ப தன்றிப்
பேசஒன் றில்லை; பூமி
    பித்தரைச் சுமக்க லாமோ? 2

படித்தவர் பட்டம் பெற்றோர்
    பதவியில் உச்சம் பெற்றோர்
கெடுத்தனர் அறத்தை என்றால்
    கீழ்களை விட்டு வைத்தல்
மடத்தன மன்றோ? நாட்டில்
    மக்களேன்? சட்டந் தான்ஏன்?
தடுத்திதை நிறுத்தா விட்டால்
    தாங்கிடுஞ் செங்கோல் ஏனோ? 3

கைப்பணம் ஒன்றுக் காகக்
    கடமையை விற்கும் மாக்கள்
பொய்ப்பிணம் போல்வர்; நாட்டில்
    நோய்செயும் புழுக்க ளாவர்;
பைப்பணம் காட்டி விட்டால்
    நாட்டையும் பகைக்கு விற்பர்;
செய்ப்புலக் களையால் நன்மை
    செழித்திட வழியே இல்லை. 4

ஆடாது சமன்செய் கோல்போல்
    அவரவர் செயலுக் கேற்பக்
கோடாது நடுவில் நின்று
    கூறலே தீர்ப்பின் பாங்கென்
றேடாளுஞ் சான்றோ ரெல்லாம்
    இயம்புவ துணர்ந்த நல்லோர்
ஊடாக இருத்தல் கண்டேன்
    உள்ளத்தில் அமைதி கொண்டேன் 5

## 31. களவும் கற்பும்

(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)

பாழ்தருங் கள்ளொடு பரத்தைமை நாட்டிற்
காழ்கொளல் கண்டு கடிந்திட நல்லோர்
பழுத்த மதியாற் படைத்தநற் சட்டம்
எழுத்து வடிவில் ஏட்டில் உண்டு;
கள்ளின் மயக்கொடு காவலர் சிற்சிலர்
எள்ளும் பரத்தையர் இல்லிற் கிடந்தனர்
என்னுஞ் செய்தியை ஈங்குள தாளிகை
பன்னும் விந்தையும் பலபல உண்டு;
களைத்துப் படுத்துக் கண்ணயர் பொழுதில்
பிழைப்பு நடாத்திக் கொழுத்த திருடர்
நள்ளிருள் பார்த்து நாடிய பொருளைக்
கொள்ளை கொளாவணம் கூர்த்த நோக்கொடு
காவலர் பணிபுரி காவல் நிலையம்
மேவிய ஊரெலாம் மிகப்பல வுண்டு
பொருள்கவர் கள்வர் பொறியிற் சிக்கினால்
திருத்தவும் ஒறுக்கவும் சிறைபல வுண்டு;
காவலுஞ் சிறையுங் காண்குதும் என்னும்
பாவிகள் பகலிற் படுகொலை செய்து
திருடிச் செல்லுந் தீரச் செயல்கள்
விரவுதல் செவியில் விழுவது முண்டு;
தீயவர் திருடிப் போயஅப் பொருளில்
காவலர் பங்கும் கணக்கில் உண்டாம்;
காமுகர் சிலராற் கன்னியர் கற்புத்
தோமுறா வண்ணம் தூயநல் லுணர்வுடன்
காக்கும் பணிக்கே காவல் நிலையம்
ஆக்கினர் என்பர் ஆகினும் உண்மை
நடப்பினை நாளிதழ் கொடுப்பதைக் காணின்
துடித்திடும் உள்ளம் வெடித்திடும் ஐயஓ !
பசித்திடும் உடலினர் பாவையர் கற்பைப்
புசித்தனர் அந்தப் புனித நிலையத்து
கடமை யுணர்வைக் காலால் நசுக்கி
உடலினைச் சுவைத்தவர் உயிரையும் பறித்தனர்
என்ற செய்திகள் எத்தனை ! எத்தனை !
இமையோ விழிகளுக் கிடர்தர முயல்வது?
இந்நிலை தொடரின் எரிமலை ஒருநாள்
தன்னிலை மறக்கும் தானே வெடிக்கும்
மக்கள் பொருளும் மடவார் கற்பும்
தக்கவர் காவல் இன்றெனின் இன்றாம்;
மக்கள் கூட்டம் மனந்துடித் தெழுமேல்
தக்கோர் காவலை மறுநாள் தருமே.

## 32. மருத்துவ மனையா? வருத்தும் மனையா?

(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)

பிணியிடை உழலும் மாந்தர்
பேணுநர் இல்லோர் நோய்கள்
தணிவுற அரசன் சார்பில்
தருகொடை மிகுதி யாகும்;
பணியினில் திறமை மிக்க
[1]பண்டுவர் பலரும் உண்டு;
மணிமணி மருந்தும் உண்டு
மற்றும்நல் லமுதும் உண்டு. 1

மருத்துவ மனைகள் யாவும்
வறியராய் வருவோர் தம்மை
வருத்துவோர் மனைக ளாகி

வருவது காணு கின்றேன்
வருத்தமே மிகுதி யாக
வாடிடும் மனத்த னானேன்
திருத்தவோர் மருந்தா இல்லை?
தெரியினுந் தீர வில்லை! 2

வெடுக்கெனப் பேசு வோரும்
விறைப்புடன் கனன்று தேளின்
கொடுக்கெனக் கொட்டு வோரும்
கொடுப்பதைச் சுருட்டு வோரும்
படுக்கையிற் கிடப்பார் தம்மைப்
பாவிகள் படுத்தும் பாடு
நடுக்கமே கொள்ளச் செய்யும்
நலிந்தவர் யாது செய்வர்? 3

விலையுயர் மருந்த னைத்தும்
வேறிடம் பறந்து போகும்
இலைகறி காய்க ளெல்லாம்
எங்கெங்கோ சமைய லாகும்
அலைவுறும் பிணியோர் இங்கே
அலையுறுந் துரும்பாய் நிற்பர்
நிலையிது காணுங் காலை
நெஞ்சினிற் கனலே மூளும் 4

மருத்துவர் வீட்டிற் கேகி
வைப்பதை வைத்து விட்டால்
திருத்தமாக் கவனம் வைப்பர்
பிணிகளும் தீர வைப்பர்
நரித்தனத் தாதி மார்கள்
நாடகம் ஆடும் முன்பே
அரித்திடும் அவர்தம் கையில்
அதைஅதை வைத்தல் வேண்டும் 5

பண்டுவப் பணிதான் பாரில்
ஒப்பிலாப் பணியாம்; நன்மை
கண்டவர் கடவு ளென்றே
கைதொழு தவரை யேத்திக்
கொண்டுளம் மகிழ்வர்; மக்கள்
கும்பிடுந் தொழிலைத் தம்பாற்
கொண்டவர் ஈது ணர்ந்து
கொள்வரேற் குறைக ளேது? 6

மகிழ்வுடன் சம்ப ளங்கள்
மருத்துவ மனையிற் கொள்வர்;
புகுபிணி யாள ருக்கோ
புகலிடம் மருந்த ரில்லம்;
மிகுபொழு தழிவ தந்த
மேலவர்க் கில்லி லேதான்
தொகுபொருள் நோக்க மானால்
துவண்டவர் எங்கே செல்வர்? 7

புதுமனை மருத்து வர்க்குப்
பொருள்தரச் செல்வ ருண்டு
[2]பொதுமனை புகுவ தன்றிப்
புகலிடம் வறியர்க் கேது?
மதுவுணும் மதியர் போல
மருத்துவர் மயங்கா ராகி
எதுசரி யெனநி னைந்தே
ஏற்றதோர் பணியைச் செய்க. 8

---

**அருஞ்சொற் பொருள்:–**
1. பண்டுவர் – மருத்துவர். 2. பொதுமனை – பொது மருத்துவமனை.

## 33. நியாய விலைக்கடை
(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)

நிறுக்கின்ற பொருள்களிலும் அளக்கின்ற
பொருள்களிலும் நேர்மை யுண்டா?
வெறுக்கின்ற படியன்றோ விளையாடல்
புரிகின்றார்; விலைகொ டுப்போர்
கறுத்தெழுந்தால் நியாயவிலைக் கடையென்பார்
நியாயத்தைக் கடையில் விற்பார்;
பொறுத்திருந்து பார்த்திருப்போர் பொங்கியெழும்
நாளொன்று புகுந்தே தீரும் 1

வாங்காதார் பெயர்களெலாம் வாங்கியதாப்
பதிந்திருக்கும்; வந்து விட்டால்
தீங்காளர் பொருள்நேற்றே தீர்ந்ததென்பார்;
அதுவேறு தெருவிற் போகும்;
போங்காலம் வாராதோ? பொதுமக்கள்
ஏங்குகிறார்; புல்ல ருக்கே
ஆங்காலம் ஆயிற்றா? அழிகாலம்
மேவிற்றா? ஆரே கண்டார்! 2

கண்ணெதிரில் அளந்தபொருள், கடையிலவர்
நிறுத்தபொருள் கடுகி வந்து
பின்னதனைப் பார்த்தாலோ பெற்றதெலாங்
குறைந்திருக்கும்; பெருத்த மாயம்
பண்ணிடுவர்; சுட்டெரிக்கும் பகற்பொழுதில்
வரிசைதனிற் பிச்சை மாந்தர்
நண்ணுதல்போல் மகளிரெலாம் நடுத்தெருவில்
காத்திருப்பர்; நடைதான் மிஞ்சும். 3

விலையின்றி மனமிளகி ஈவதுபோல்
வந்தவரை விரட்டு கின்றார்;
தலையொன்று குறையாமல் தருவதற்குப்
பொருள்மிகவே தந்தி ருந்தும்
இலையென்று மொழிகின்றார் ஈவிரக்கம்
இல்லாமல் ஏய்த்து நிற்பார்;
கலையென்று கவருவதைக் கற்றவர்கள்
களியாட்டம் ஆடு கின்றார் 4

இந்தநிலை மாறாதா? இழிவுநிலை
தீராதா? எளிமை யாக
வந்தவர்கள் பொருள்வாங்கி வாழும்நிலை
வாராதா? வாக்கு வாங்க
வந்தவர்கள், துயர்நீங்க வழியொன்றுஞ்
செய்யாரா? வாடும் மக்கள்
நொந்தமனம் ஆறாதா? நூறாண்டு
சென்றாலும் நோய்தீ ராதா? 5

விடுதலையும் பெற்றுவிட்டோம் விழாக்களையும்
நடத்திவிட்டோம் விண்கூ டத்தில்
படுவிரைவில் ஏறிவிட்டோம் பலமுனையிற்
சிறந்துவிட்டோம் பாழும் நாட்டிற்
கெடுதலையே காணுகிறோம் கீழ்மைகளே
பூணுகிறோம் கிடக்கும் மக்கள்
படுதுயரந் தீரவில்லை பஞ்சங்கள்
மாறவில்லை பயனே இல்லை. 6

விடுதலையால் என்னபயன்? வேளைதொறும்
நுகர்பொருள்கள் விரைந்து வாங்கப்
படுதுயரம் உறலாமோ? பகிர்ந்தளிக்குங்
கடைகளிலும் பழிகள் செய்யும்
கெடுதலைகள் வரலாமோ? கெடுநிலையில்
மக்களினும் கிடக்க லாமோ?

விடுதலையால் என்னபயன்? வெற்றொலியால்
என்னபயன்? வினவு கின்றோம் 7

விடைபகர வாயில்லை விடுதலையை
நுகர்வோர்க்கு விழிகள் இல்லை
இடையிலெவர் உரைத்தாலும் இருசெவியும்
சரியில்லை என்னே விந்தை!
குடைநிழலில் அமர்ந்திருப்போர் கூர்வெயிலின்
வெம்மைதருங் கொடுமை காணார்
படைநடுங்கும் பெரும்புரட்சி பரவிவரின்
மக்கள்துயர் பறந்து போகும் 8

## 34. கையூட்டுலகம்

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

உலகிலே கையூட் டில்லா
ஓரிடம் உண்டா? எங்கும்
நிலவியே படர்ந்த டர்ந்து
செழித்துயர் நிலையில் நிற்கும்;
வலிவுறும் அஃதின் றாமேல்
வாழ்க்கையே இயங்கா திங்கே;
கொலைகளும் மறைந்து போகும்
கொடுத்திடுங் கையூட் டாலே. 1

இழிவெனக் கையூட் டேற்றல்
எண்ணினர் அற்றை நாளில்;
அழகெனக் கருது கின்றார்
அனைவரும் இற்றை நாளில்;
பழியெனப் பேசி, வாங்கக்
கூசினர் பழைய மாந்தர்
தொழிலது சரியே என்று
சொல்லுவர் புதிய மாந்தர். 2

அரசுசார் அலுவல் மன்றம்
அருங்கலை வளர்க்குஞ் சாலை,
புரையிலா நீதி மன்றம்,
புனிதமொ டேத்துங் கோவில்,
சிறையுறுங் காவற் கூடம்
எங்குமே சென்று வெற்றி
தருவது கையூட் டாகும்
தடுப்பவர் எவரு மில்லை. 3

மறைவினிற் பெறுவ தில்லை
மறந்துமே விடுவ தில்லை
குறைவறத் தொகையைப் பேசிக்
கொடுத்தபின் எதுவுஞ் செய்வர்
நிறைவதை ஒருவர் மட்டும்
கவர்ந்திடா நேர்மை யுண்டு
பிறருடன் தகுதிக் கேற்பப்
பகிர்வதே பெருவ ழக்கம். 4

உரியதோர் கல்வி கற்றார்
உயரிய பதவி பெற்றார்
சிறியதாம் பணியி லுள்ளார்
சீரிய கல்வி யில்லார்
சரிநிக ராவர் வைக்கும்
கையூட்டுச் சாமி முன்னர்;
அரியதோர் செயலே யில்லை
எதனையும் அதுவே செய்யும். 5

அலுவலைக் குறைத்துக் கொண்டான்
ஆசையைப் பெருக்கிக் கொண்டான்

பலபழி செய்தும் வாழ்வைப்
பகட்டுதற் கெண்ணி விட்டான்
நலவழி நடப்ப தற்கு
நாட்டமே அவனுக் கில்லை
சொலவொரு சொல்லு மில்லைத்
தூய்மையை மாய்த்தே விட்டான் 6

தேவையைப் பெருக்கிக் கொண்டால்
திசைகளும் மாறிப் போகும்;
ஆவலை வளர விட்டால்
அதற்கென எல்லை யில்லை;
கோவழி எதுவோ அஃதே
குடிவழி யாகுங் கண்டீர்
ஆவது கருதும் மாந்தர்க்
காட்சியிற் கவனம் வேண்டும். 7

## 35. எது நாட்டுப் பற்று?
**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

உழைப்பதே யின்றி நாடு
வாழ்கவென் றுரத்துச் சொன்னால்
தழைத்திடும் என்று நீவீர்
எண்ணுதல் தவறே யாகும்;
இழைத்திடுஞ் செயலொவ் வொன்றும்
ஈன்றதாய் நாட்டைச் சாரும்;
உழைத்திட முயல்வோ மென்ற
உணர்வுதான் நாட்டுப் பற்றாம் 1

உரிமையைக் கற்றுக் கொண்டீர்
கடமையை உதறி விட்டீர்
ஒருநிலை தாழ்ந்தும் மற்ற
ஒருநிலை உயர்ந்தும் நின்றால்
வருபயன் ஒன்று மில்லை
வளர்ச்சியும் வற்றிப் போகும்
[1]இருநிலை சமமாய் நின்றால்
நாட்டினில் ஏற்றம் உண்டாம் 2

அலுவலர் இருக்கை மேலே
அமர்ந்திடும் நேர மென்ன?
பலவகை இதழ்கள் தூக்கிப்
படித்திடும் நேர மென்ன?
கலகல வென்று பேசிக்
கழித்திடும் நேர மென்ன?
சொலுமிடை வேளை என்றே
சுற்றிடும் நேர மென்ன? 3

அனைத்தையுங் கூட்டிப் பார்த்தால்
அலுவல்செய் நேர மென்ன?
தினைத்துணை நேர்மை யேனும்
சேர்ந்தவர் சிந்தித் தாய்க;
பனைத்துணை உயர்ந்த கோப்பிற்
படிந்துள தூசி பாரீர்
நினைத்தினித் திருந்து வீரேல்
நேர்ந்திடும் நாட்டுப் பற்று 4

கோப்புகள் பார்க்குங் கண்கள்
கொழுவிய பைகள் பார்க்கும்
தீர்ப்புகள் எழுதுங் கைகள்
தினவினைச் சொறிந்து காட்டும்
காப்புயர் நிலையம் இங்கே
களவுகட் குடந்தை யாகும்

ஏய்ப்பவர் மிஞ்சி விட்டால்
எப்படி நாடு வாழும்? 5

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. இருநிலை – உரிமையும் கடமையும்.

## 36. எழுத்துலகம்

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

சதைப்பசிக்குத் தீனியிடும் சங்கரிகள்
கூட்டத்தார் தடித்த நெஞ்சால்
எதைக்கெடுத்தும் எழுதுகிறார் எதைக்கெடுத்தும்
வாங்குகின்றார் இளைய நெஞ்சை;
கதைப்படைப்பாம் ஐயஓ காமத்தின்
படைப்பைத்தான் காட்டு கின்றார்
அதைப்படிக்கும் சிறுவர்க்கும் ஆசையைத்தான்
தூண்டுகின்றார் அனைத்தும் விட்டோர் 1

எழுத்தாளர் கைகளிலே இருப்பதெல்லாம்
எழுதுங்கோல் என்று கூறேன்
பழுத்தோர்கள் வளர்த்துவிடும் பண்பாட்டுப்
பயிர்களெலாம் பாழாய்ப் போகக்
கழுத்தறுக்க வைத்திருக்கும் கருக்கரிவாள்
என்றுரைப்பேன்; காமத் தீயில்
பழுக்காது காய்ச்சியிளம் பிஞ்சுள்ளத்தில்
பாய்ச்சுகிற சூட்டுக் கோலாம், 2

கதைக்கேற்ற படமென்பார் கவர்ச்சிதரும்
படமென்பார் காமஞ் சொட்டும்
சதைக்கேற்ற மெருகேற்றிச் சரிந்துவிழுந்
துணிகாட்டிச் சாயம் பூசி
எதைக்காட்டிப் பணம்பறிப்போம் எனநாட்டில்
இதழ்விற்போர் இளைஞர் நெஞ்சிற்
பதைப்பேற்றி வைக்கின்றார் பாழ்பட்ட
நெஞ்சத்தார் பண்பே யில்லார். 3

பரத்தமைதான் எழுத்துலகில் பரவிவரல்
எவர்குற்றம்? பணத்துக் காகத்
தரத்தைவிடும் எழுத்தாளர் தாமோஅத்
தாள்நடத்தும் தரகர் தாமோ?
உரத்தபசிக் குணவாக உவந்தோடிப்
பாய்ந்ததனை உண்ணு கின்ற
மரத்தமனம் படைத்தவரோ? மதியிழந்த
மூவருந்தான் கூண்டில் நிற்போர் 4

பாலுணர்ச்சிப் பசியாளர் பல்குதலும்
காண்கின்றோம் பழுதுபட்ட
மாலுணர்ச்சி எழுத்தாளர் மல்குதலும்
காண்கின்றோம் மதியை யூட்டும்
நூலுணர்ச்சி யற்றவராய் நோயுற்ற
மாந்தரிவர் நுடங்கு கின்றார்
காலுணர்ச்சி மானத்திற் கைக்கொளினும்
போதுமடா காலம் மாறும் 5

## 37. கேள்வி – பதில்

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

குடும்பத்தார் பயில்கின்ற கொள்கைவழி
வருமிதழாம்; கோண லின்றி
உடம்பைத்தான் காட்டுகிற ஒருத்திபடம்

மேலுறையில்; ஓர்நாள் கண்டேன்;
விடம்வைத்த பேழையென விளங்காமல்
படித்துவிட்டேன் வியர்த்துப் போனேன்;
கெடும்பைத்தான் அதிற்கண்டேன் 'கேள்விபதில்'
கீழ்மையைத்தான் கிளத்தக் கண்டேன். 1

மூதாட்டி அதைப்படிக்க முந்துகிறாள்
முதியவரும் மோது கின்றார்
தீதூட்டும் அதனைத்தான் சிறியவருந்
தேடுகிறார் தேன்நி றைந்த
[1]போதாட்டி உணும்வண்டாய்ப் பூவையரும்
ஆடவரும் போய்ப்ப டிப்பார்
[2]ஏதாக்கும் எனநினையார் இதனாற்றான்
குடும்பத்தார் இதழென் றாரோ 2

குடும்பத்தில் மறைவிடத்தில் கூடிமகிழ்
பொழுதத்திற் குலவல் பற்றி
நடும்வித்தின் அளவேனும் நாணமிலாள்
வழியொன்று நாடிக் கேட்பாள்;
கெடும்வித்தை கற்றவனும் கேள்விக்கு
விடையளிப்பான்; கீழ்மை யில்லாக்
குடும்பத்தாள் குலவுவதற்குக் குறிப்புகளை
மற்றவனா கொடுக்க வேண்டும்? 3

'நடிகைக்குக் கணவன்யார்? நள்ளிரவில்
என்செய்வாள்? நாடும் என்பாற்
[3]படிகைக்கு வருவாளா? பாவைக்குத்
தொகையென்ன? படுக்கை நொந்து
விடிகைக்கு வாடுகிறேன் வினவுகிறேன்
விடைசொல்லும்' வீணன் இந்தப்
[4]படிகைக்கு வந்ததெலாம் வரைகின்றான்
[5]பாழிதழார் பதிலும் சொல்வார். 4

அழகிக்கு மணவாளர் எத்தனைபேர்?
யாரிடத்தில் அவளுக் காசை?
பழகுவதற் கினியவளா? படுக்கையிலே
ஒருசாய்ந்து படுப்ப துண்டா?
எழிலிக்கு வயதென்ன? எடையென்ன?
இரவிலவள் உண்ப தென்ன?
தொழிலுக்கு வாங்குகிற தொகையென்ன?
உடுத்துகிற துணிக ளென்ன? 5

அவளுக்குக் காதலன்யார்? அழகிமனத்
தவ்வுணர்ச்சி அரும்பா? காயா?
எவனுக்கு மாலையிட எண்ணுகிறாள்?
பருவமகள் என்ன வானாள்?
அவளொருவன் மனைவியென ஆனபினும்
மற்றவன்மேல் ஆசை வைக்குந்
தவறுக்கேன் ஆளானாள்? தனதெழிலால்
கவர்ச்சிமிகும் தையல் யாவள்? 6

பத்திரிகை தாங்கிவரும் பாழ்பட்ட
வினாக்களிவை; பதிலும் ஏந்தும்;
இத்துறையில் வினாவிடைகள் எழுமானால்
குமுகாயம் இழிந்து விட்ட
அத்துயர்தான் மிஞ்சிவரும்; அவனுக்கோ
காசுவரும்; ஆக்க நோக்கில்
எத்துறையில் ஐயங்கள் எழவேண்டும்?
அத்துறையில் எழவே யில்லை. 7

நச்சுமிழும் வினாக்களுக்கு நல்லவரா
விடையளிப்பர்? நஞ்சு தன்னை
எச்சமயம் புகுத்திடலாம் எனப்பார்க்கும்

இழிந்தவரே இதனைச் செய்வர்;
அச்சமிலார் நாணமிலார் அரிவையர்தம்
கதைசொல்லி ஆள்கள் சேர்க்கும்
கொச்சைமனங் கொண்டவர்கள் குமுகாயங்
கெடுப்பதற்குக் கூச மாட்டார். 8

நடிகையரை ஆய்வதற்கா நாளிதழ்கள்?
நாட்டவர்தாம் நடத்து கின்ற
கெடுதிகளைத் தெரிவதற்கா கிழமையிதழ்?
இளநெஞ்சிற் கீழ்மை யெல்லாம்
படியவிடும் நோக்கிற்கா பாழிதழ்கள்?
இவைவிடுத்தாற் பயனில் மூடக்
கொடுமைவளர் பேரிதழ்கள்! காசுபெற
எதுசெயவும் கூச வில்லை. 9

அங்கங்கே அறிவியலின் ஆய்வுரைகள்,
அரசியலை ஆழ்ந்து கற்றோர்
எங்கெங்கே என்னென்ன எழுதியுளார்?
இலக்கியத்தின் நயங்க ளென்ன?
இங்கவற்றைத் தெரிந்துகொள இளைஞரினம்
முன்னேற எடுத்து ரைத்தால்
எங்களினம் எழுச்சிபெறும் எம்நாடும்
ஏற்றமுறும் எந்நாள் அந்நாள்? 10

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. போதாட்டி – மலரை அசைத்து. 2. ஏது – குற்றம். 3. படிகைக்கு – படிவாளா. 4. இந்தப் படிகைக்கு – இந்தப்படி கைக்கு வந்தது. 5. பாழிதழார் – பாழான பத்திரிகையாளர்.

## 38. முளையிலே கிள்ளுக

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

தெருவிடையே நடக்குங்கால் திரிதருமோர்
எருமையெனத் திமிர்ந்து செல்வான்
வருமொருவன் எதிர்ப்படினும் வழிவிலகும்
உணர்வின்றி மதர்த்துச் செல்வான்
குருடனென நடுவழியிற் குறிவைத்துப்
பித்தன்போற் குறுகிச் செல்வான்
இருபுறமுஞ் சிறுமகன்போல் எதையெதையோ
நோக்கிடுவான் எதிரில் நோக்கான் 1

ஊர்திஎதிர் வரும்பொழுதும் ஊதுவதுங்
கேளானாய் ஊர்ந்து செல்வான்
நேர்வருவோர் நேரிழையார் எனினுமவன்
விலகாது நெருங்கிச் செல்வான்
தேர்வரும்நாள் எனவுரைத்தால் தீயனுக்கே
வருகின்ற திருநா ளாகும்
தீர்வறியாக் கொடுமைகளைத் திருநாட்டில்
யார்வருவார் திருத்து தற்கு? 2

தந்தையொடு சென்றாலும் தங்கொழுநர்
உடன்செலினும் தைய லர்க்கிங்
கெந்தவொரு காப்புக்கும் இடமில்லை
ஏதேதோ நேரும் தொல்லை;
வந்தவொரு சுதந்திரத்தை வாலிபர்கள்
நுகர்கின்ற வகைதான் என்னே!
இந்தவழி ஏகிடத்தான் என்னவழி?
சட்டங்கள் ஏதுஞ் செய்யா 3

மிதிவண்டி ஏறுபவன் மிடுக்கோடு
செல்கின்ற வேகங் காணின்
கதிகலங்கும்; முன்னோக்கான் கன்னியரின்
பின்னோக்கிக் கண்செ லுத்தும்

எதிர்வருவோர் மேல்மோதும் ஏகுகிற
வழிவிலகி எங்கோ செல்லும்;
மிதியடிதான் இச்செயலை வீழ்த்துமலால்
சட்டங்கள் வேலை செய்யா 4

முச்சந்தி நாற்சந்தி முடுக்குகளிற்
கூடுகிற முரட்டுக் காளை
எச்சந்தில் எந்நேரம் எவர்வருவார்
எனநோக்கி எக்க ளித்தே
அச்சங்கள் இல்லாமல் அவர்தம்மை
எள்ளிநகைத் தாடல் கண்டோம்
இச்செயல்கள் கசையடியால் ஏகுமலால்
வேறொன்றால் ஏக மாட்டா. 5

பள்ளிசெலும் சிறுமியரைப் பகற்பொழுதில்
இளைஞரினம் பகடி பேசி
எள்ளிநகை செய்கின்றார் இதுகண்டு
பெற்றோரும் இருக்கின் றாரே!
பிள்ளைகளைப் பேணாது பெற்றவரும்
இருந்துவிடின் பீழை யன்றோ?
முள்ளுமரம் முற்றாது முளையிலதைக்
கிள்ளுவதே முதன்மை வேலை 6

பிஞ்சுகளைப் பேணுவதும் பிழைசெய்யின்
கடிவதுவும் பெற்ற வர்க்கே
எஞ்சலிலாக் கடனாகும் எமக்கென்ன
என்றவர்தாம் இருப்ப ரானால்
மிஞ்சுவது தீமையன்றோ? மேன்மைநிலை
விளைந்திடுமோ? வீணிற் பெற்றுக்
கொஞ்சுவது போதாது குடிமக்கள்
ஆக்குவதும் கொள்கை யாகும் 7

கோதுக்குட் போகாமல் குமுகாயம்
மேலோங்கும் குறிக்கோள் கொண்டு,
சாதிக்கோ உறவுக்கோ சார்ந்திருக்குங்
கட்சிக்கோ தாழ்த லின்றி
நீதிக்கு மதிப்பளிப்போர் நேர்மைக்கு
வழிவகுப்போர் நெஞ்சம் உள்ளோர்
வீதிக்கு வீதியொரு குழுவமைத்து
முயலுவரேல் விளைவு நன்றாம் 8

## 39. திரையரங்க வீரம்

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

திரைப்படமா போர்க்களமா எனநினைக்கத்
தெருவெல்லாந் திரளுங் கூட்டம்
நெருக்கடியிற் சிக்குண்டு நேரிழையார்
வதங்கிடினும் நிற்க மாட்டார்
நரைக்கிழவர் முதலாக நல்லஇளங்
குமரிவரை நாடி நிற்பார்
உருப்படவோர் வழியில்லை ஒழுக்கத்தைப்
புதைக்கின்றார் ஊரார் கூடி 1

வியர்வையினால் உடல்நனைய விலையுயர்ந்த
உடைகிழிய விரைந்து சென்று
வெயில்நடுவே மற்றவரை வீரமிகு
தோள்களினால் விலக்கித் தள்ளி
அயர்விலராய்க் கூட்டத்தின் அணியுடைத்துப்
புகுந்துவரும் ஆண்மை மாக்கள்
செயலெல்லாம் படம்பார்க்குஞ் சீட்டொன்றைப்
பெற்றிடத்தான்; வீரம் வாழ்க 2

நாணத்தை மானத்தை நாகரிக
நங்கையர்கள் நல்ல வண்ணம்
பேணித்தம் பெண்மைக்கு மதிப்புவர
நடப்பதுதான் பெருமை யாகும்;
காணச்செல் திரையரங்கில் கன்னியர்தம்
நடைமுறையுங் கைக லப்பும்
காணக்கண் கூசுமவர் வாய்மொழிகள்
கேட்பதற்குக் காது கூசும் 3

மகளிர்க்கு வீரமிலை எனவுரைத்தால்
மடமாகும்; மாளி கைக்குள்
புகுதற்குள் அவர்புரியும் போர்முறைகள்
பார்த்தபினர்ப் புகலல் செய்யார்;
வெகுளிக்கே இலக்காகி மேலாடை
உடல்நழுவி விழுதல் காணார்
புகுவெற்றி கண்டதன்பின் போர்விடுப்பர்
பூவைமறம் பொலிந்து வாழ்க 4

## 40. மனித மந்தை
(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)

ஒருவழியிற் போவென்றால் வரும்வழியிற்
புகுகின்றான்; ஓரஞ் சென்று
தெருவழியில் நடவென்றால் தெளிவில்லான்
நடுவழியிற் றிரிகின் றானே;
ஒருவழியுந் தேறானாய் உயர்வழியும்
அறியானாய் ஓடு கின்றான்;
மருள்வழியே செல்கின்றான் வழிவிலகிப்
போகின்றான் மதியுங் கெட்டான் 1

ஊர்திகளில் ஏறிவிடின் உரிமையவன்
பெற்றதுபோல் ஒதுங்க மாட்டான்
யார்வரினும் இடமில்லை அப்பக்கஞ்
செல்கவென அறிவுஞ் சொல்வான்;
நேர்மையுளான் போற்பேசும்; நிற்பவர்க்கும்
இடங்கொடுக்க நெகிழா துள்ளம்;
போர்புரிவான் எவரேனும் புகுந்துவிடின்;
பொதுநலமே போற்ற மாட்டான். 2

உந்துகளில் ஏறுங்கால் ஒருபெரிய
சமர்விளைப்பான் ஒழுங்கு போற்றான்;
வந்தமர்ந்து வெற்றிலையை மடித்தெடுத்துக்
குதப்புமவன் வழியில் துப்பி
அந்தவழி ஏகிடுவார் ஆடைகளைச்
செந்துளியால் அழகு செய்வான்
இந்தஒரு மடையனுக்கு மந்தையிலே
திரிவதலால் இங்கென் வேலை? 3

ஒதுங்குகிற இடமிருந்தும் உணர்வுடைய
மனிதனவன் ஒதுங்க மாட்டான்
மதம்படுவான் கூச்சமிலா மாடுகள்போல்
நடமாடும் வழியி லெல்லாம்
ஒதுங்குகிறான்; பகுத்தறியும் உணர்வில்லா
உடலானுக் குடையெ தற்கு?
வதங்கிடுமா இவன்மேனி? வழிவிலகிப்
பழகியவன் மாறான் போலும்! 4

## 41. மனிதனைத் தேடுகிறேன்.....
(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)

## எண்சீர் விருத்தம்

மானுடத்தை உலகெங்குந் தேடித் தேடி
   மனமயங்கிச் சோர்வுற்றுத் தளர்ந்தே னன்றி
நானெடுத்த முயற்சியிலே வெற்றி காணேன்;
   நடுத்தெருவில் பகற்பொழுதில் விளக்கெ டுத்தே
ஊனொடுக்கங் கொண்டவுடற் கிழவர் ஓர்நாள்
   ஒவ்வொருவர் முகம்பார்த்துஞ் சலிப்புக் கொண்டு
மானுடத்தைக் காணவிலை என்ற யர்ந்த
   மதிமிகுந்த கதையைத்தான் நினைவிற் கொண்டேன். 1

அணுவெடுத்தான் பிளந்துடைத்தான் அதனைக் கண்டேன்
   அடடாஓ! எனவியந்தேன்; அறிவால் பெற்ற
துணிவெடுத்தே அண்டத்தைத் தூள்தூள் ஆக்கத்
   தொடங்கிவிட்டான் அன்பினையே உடைத்து விட்டான்
கணுவடுத்த மூங்கில்மரம் தான்பி றந்த
   காட்டகத்தை எரிப்பதுபோல் ஆகி விட்டான்
பிணமடுத்த காடாக உலகை யாக்கும்
   பேதைமைகண் டையோவென் றலறு கின்றேன் 2

விண்மதியை மிதித்துவிட்டான் மானு டத்தின்
   வெற்றியென மகிழ்ந்திருந்தேன் வியந்து நின்றேன்;
[1]ஒண்மதியை மிதித்துவிட்டான் மானு டத்தின்
   ஒருதோல்வி எனத்தளர்ந்தேன் ஓய்ந்து நின்றேன்;
விண்வழியில் மிதந்துவந்தான் மானு டத்தின்
   வெற்றியிது வெனமகிழ்ந்தேன் வீறுங் கொண்டேன்;
மண்வழியை மறந்துவிட்டான் மானு டத்தின்
   மறுதோல்வி எனவீழ்ந்தேன் மயக்கங் கொண்டேன் 3

வாழ்வென்னும் வழியதனிற் செல்லும் போது
   வழுவாமல் நடுவில்தான் நடத்தல் வேண்டும்
பாழ்மனிதன் அதைமறந்தான் ஓரஞ் சென்றே
   பழகிவிட்டான்; கடைத்தெருவில் ஏகுங் காலை
நீள்வழியின் ஓரத்தே நடத்தல் வேண்டும்
   நெடுமனிதன் நடுவில்தான் செல்லு கின்றான்
சூழ்மதியன் எதுசெயினும் மாறு பட்டே
   தொலைகின்றான் ஆறறிவிற் குறைந்தே போனான் 4

துறவுநிலை தனைநோக்கின் மனந்தி றந்து
   சொல்வதற்கோ வழியில்லை; வாணி கந்தான்
காவுகளுக் கிருப்பிடமாம்; கல்விக் கூடம்
   கட்டவிழப் பயில்களமாம்; கோவி லென்றால்
திருடர்களும் கயவர்களும் மறைந்து கொள்ளத்
   தேர்ந்தெடுத்த குகையாகும்; மாக்கள் போல
அறநெறியை அறமறந்தார் வெறியுங் கொண்டார்
   அதனைத்தான் மதமென்றும் விளம்பு கின்றார். 5

நானெடுத்து மொழிந்தவெலாம் பொய்ம்மை யன்று;
   நாட்டகத்தே இச்செயல்கள் மலியக் கண்டேன்
மானுடத்தைக் காண்பதெங்கே? பேசு கின்ற
   மாவினத்தைக் காண்கின்றேன் யாது சொல்வேன்?
ஊனெடுத்த உடலாலோ உடலை மூடும்
   உடையாலோ உணவாலோ ஊர்தி யாலோ
மானுடத்தின் நிலைஎய்த இயலா தாகும்
   மனப்பண்பு மிக்கவரே மக்க ளாவர். 6

மற்றவர்தம் துன்பத்தைக் காணும் போது
   மனமுருகி விரைந்தணுகி அதனை நீக்கக்
கற்றவனே கற்றவனாம்; உதவும் பண்பைக்
   கல்லாதான் கல்விபல கற்றா னேனும்
முற்றியநல் மரம்போல்வான்; மரத்தில் ஒன்று
   முரிந்தொடிந்து வீழ்ந்திடுமேல் நிற்கும் ஒன்று
மற்றதற்கு மனமிரங்கி உதவ லுண்டோ?

மானிடனும் அவ்வாறு நிற்றல் நன்றோ? 7

மற்றவர்க்கே உரியதனைக் கவர்வ தற்கு
மனத்தாலே நினைத்தாலும் கவர்ந்த தைப்போல்
குற்றமெனக் கருதுகின்ற உணர்வு வேண்டும்;
குறைவறியா அறநூல்கள் உரைத்த வற்றைக்
கற்றபடி கடைப்பிடித்து நடத்தல் வேண்டும்
கற்றவர்கள், பெரியவர்கள், தந்தை தாயர்
சொற்றபடி நடக்கின்ற ஆர்வம் வேண்டும்;
தூய்மையிலே தோய்கின்ற நெஞ்சம் வேண்டும். 8

சாதியினால் பதவியினால் சமயப் போக்கால்
தாழ்ந்தவரும் உயர்ந்தவரும் இல்லை யென்றே
ஓதுவதாற் பயனில்லை; உள்ளம் ஒன்றி
உடன்பிறப்பென் றனைவரையுஞ் சமமாக் கொண்டு
மேதினியில் வாழ்வதுதான் மானி டர்க்கு
மேன்மைதருஞ் செயலாகும் மேல்கீழ் எல்லாம்
வேதமொழி எனவந்தால் மக்கள் இங்கு
வேறாகி மாக்களென நீண்டு நிற்பர் 9

கடமைசெயத் தயங்குகிறோம்; கண்ணி யத்தைக்
காற்றின்மிசைப் பறக்கவிட்டோம்; கட்டுப் பாட்டை
அடிமைநிலை எனக்கருதி உதறி விட்டோம்;
ஆதலினால் மானுடத்தைச் சீர ழித்தோம்;
கெடுவினையை விட்டொழித்தால் அருவ ருக்கும்
கீழ்மைதனைச் சுட்டெரித்தால், இருளில் வீழ்த்தும்
மடமையினைத் தகர்த்தெறிந்தால், மக்கட் பண்பை
மதித்திருந்தால் மானுடமே வெல்லும் வெல்லும். 10

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. ஒண்மதி – அறிவு.

## 42. கடைத் தெருவில்....

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

எண்சீர் விருத்தம்

ஏகுங்கால் நடுத்தெருவில் வரிசை யாக
இரண்டுகால் காளைசில நடக்கக் கண்டோம்;
வேகஞ்சேர் உந்தெனினும் விலக லின்றி
விளையாட்டு மொழிபேசி நகைத்துக் கூவிப்
போகுங்கால் அவ்விளைஞர் செய்யுஞ் செய்கை
பொல்லாங்குப் போக்காகும் என்று நெஞ்சம்
வேகுங்கால், அவள்சொன்னாள் 'மாக்க ளாக
விரைகின்ற புதுமைக்கோர் அறிவிப்' பென்று. 1

மடந்தையரைத் தெருவழியில் காணும் போது
மானத்தை நாணத்தை மதித்த லின்றி
நடந்தருகிற் செல்லுவதும், முறைத்துப் பார்த்து
நகைப்பதுவும், ஊளையென ஓஓ வென்று
தொடர்ந்துகுரல் எழுப்புவதும், எள்ளல் செய்து
துரத்துவதுங் கண்டுமனம் நைந்தோம்; 'இங்குப்
படர்ந்துவரும் இச்செயல்தான் தமிழர் நாட்டுப்
பண்பாட்டுக் கேட்டுக்கோர் அறிவிப் பென்றாள்' 2

வருத்தமுடன் வழிநடந்தோம் பெண்க ளென்னும்
வடிவத்தைத் தாங்கியுள சிலரைக் கண்டோம்;
பொருத்தமிலா ஒப்பனைகள், எண்ணெய் காணாப்
புன்முடிகள், அரைகுறையில் அணிந்த ஆடை,
நரிக்குறவர் தந்தமணி பாசி மாலை,
நாகரிகப் போர்தாங்கு கடைச்ச ரக்கு,
மருட்கொளிபோல் தரித்துவரக் கண்டோம்; பெண்மை

மானத்தின் அழிவுக்கே போதல் கண்டோம். 3

பின்னரொரு கடைபுகுந்தோம், பொருள்கள் கேட்டோம்
பெருவணிகர் இல்லைஎனப் பணிந்து ரைத்தார்;
என்னஇனிச் செய்வதென ஏங்குங் காலை
இரட்டிப்பு விலைதந்தால் கிடைக்கு மென்றார்;
பன்னரிய நலஞ்சேரும் வாணி கத்துட்
பகற்கொள்ளைக் கூட்டங்கள் புகுந்த தாலே
நன்னெறியிற் சீர்தூக்குங் கோலை வைத்தே
நாணயத்தை விற்கின்ற நிலைமை கண்டோம். 4

திரும்புங்காற் பிணியுற்று முதுமை யுற்றுத்
தேடுவார் எவருமற்றுச் சோறு மற்று
நரம்புந்தோ லும்படிந்த நரைமூ தாட்டி
நடந்துவரக் கண்டுமனம் நைந்து போனோம்;
அரும்புங்கண் ணீர்விழியில் ததும்பி நிற்க
அங்கங்கே இரவலரும் நிற்கக் கண்டோம்;
விரைந்துலகம் கடைவழிக்கே போகும் போக்கை
விழியிரண்டால் கண்டுருகித் திரும்பி விட்டோம். 5

## 43. நமது வாணிகம்
(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)

கலிவெண்பா

வங்கக் கடலகத்தே தங்கி உருவாகிப்
பொங்கு புயலொன்று புக்குவர லாமென்று
வானொலியில் ஓர்செய்தி வந்தவுடன் வேகமுடன்
ஆன பொருளெல்லாம் அப்பாலே போய்ப்பதுங்கும்
எங்கே பதுக்குகிறார்? எப்பால் பதுக்குகிறார்?
எங்கே எவரறிவார்? இங்கே விலையேறும்;
உண்ணும் பொருளெனினும் உள்ளம் நடுங்காது
மண்ணும் பிறபொருளும் மாற்றறிய மாட்டாமல்
பண்ணுந் திறமெல்லாம் பாரறியும்; மேல்நாட்டு
மண்ணில் நமதுபுகழ் மண்மூடச் செய்துவிட்டார்;
உண்ணும் பொருளெனினும் ஓர்நாட்டுக் கேற்றுமதி
பண்ணும் பொருளெனினும் பாங்குற நாம்கலக்கும்
விந்தையினைக் கண்டு வெளிநாட்டார் தூற்றுகிறார்
நிந்தையிது வென்னும் நினைப்பில்லை வாணிகர்க்கு;
வாணிகத்திற் போற்றி வளர்த்துவரும் வெங்கொடுமை
தோணிகட்டி ஏற்றத் தொலையாது; மேலும்
கடத்தல் மறைத்தல் கலத்தல் பதுக்கல்
முடக்கல் தொழிலைந்தும் முற்றத் தெரிந்துள்ளார்;
ஐந்தொழிலும் வல்லான் அரனென் றுரைத்திடுவர்
நைந்துருகித் தோற்பான் வணிகர் நடைமுறையால்;
நாணயத்தைக் கூட்டுதற்கு நாணயத்தை விற்றுவிட்டார்;
வாணிகத்தின் சீர்மைதனை வாட்டி வதக்கிவிட்டார்;
வாங்கும் பிறர்பொருளை வாணிகர் தம்பொருள்போல்
தீங்கின்றிப் பேணிச் செயலே அறமாம்;
இவரோ பிறர்பொருளை ஏப்பம் இடுவார்;
தவறுகள் செய்யத் தயக்கம் சிறிதுமிலார்;
வாணிகத்தின் பேரால் வழிப்பறிகள் செய்கின்றார்;
நாணிகந்து செல்வரென நாட்டில் உலவுகின்றார்
கொள்ளை யடிப்பதற்குக் கூசாப் பெருவணிகர்
வெள்ளையப்பன் ஒன்றே விரும்பிக் குவிக்கின்றார்;
சட்டங்கள் போட்டுள்ள சாமி படந்தொங்கும்
மொட்டும் மலரும் முழுநீளச் சரந்தொங்கும்
பத்திக் கொருநாளும் பஞ்சம் இருந்ததிலை
எத்திப் பிழைக்க இறைவன் துணையென்பார்
நாட்டைக் கெடுக்கும் நயவஞ்ச வாணிகத்தைப்
போட்டுப் பொசுக்கிப் புதைகுழியில் மூடிவிட்டு
நாட்டுக்கு நற்பெயரை ஈட்டித் தரமுயல்க

ஈட்டுந் தொழிலோர் இனி. 

பாடற் குறிப்பு:– 1.3.1970 ஆம் நாள் பாடியது.

## 44. விடிவு தோன்றும்
(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)

நேர்கோட்டில் நடந்துசெலத் தயங்கு கின்றான்
  நெறிவிலகி நடப்பதையே விரும்பு கின்றான்
பார்போற்ற வகுத்தமைத்த அகன்ற பாதை
  பார்த்தபினும் சந்தினையே தேடு கின்றான்
சீர்காட்டும் தெருவிளக்கு நிற்கக் கண்டும்
  தெளிவின்றி இருட்டுக்குள் உலவு கின்றான்
யார்தூற்றிப் பழித்தாலும் அவனுக் கென்ன?
  எப்படியோ குறுக்குவழி ஒன்றே கண்டான். 1

நல்வழிகள் பலவிருந்தும் அவற்றை விட்டு
  நடுத்தெருவில் விலங்குகள்போல் திரிய லுற்றான்
அல்வழியில் செல்வதையே தேர்ந்து கொண்டான்;
  அதற்குரிய காரணமென்? வீடு தோறும்
நெல்விளையுங் கழனிகள் போல் விளைந்து நிற்க
  நெருக்கடியை ஆக்கிவிட்டான்; அதனால் மாந்தன்
புல்வழிகள் மேற்கொண்டான் செம்முக் கோணம்
  புகட்டுகிற நெறிநடந்தால் விடிவு தோன்றும். 2

## 45. நிலமகளா கொடியவள்?
(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)

நீதியொடு குடிமக்கள் நலம்நி னைக்கும்
  நெஞ்சுடையார் மூவேந்தர் ஆண்டி ருந்தார்;
ஆதியிலவ் வாட்சிக்கு நிகரே யில்லை;
  ஆயினுமப் பரம்பரையின் பெயரு ரைக்க
நாதியிலை; ஏனில்லை? நிலம டந்தை
  நலம்வேட்டுத் தமக்குள்ளே போர்தொ டுத்து
மோதியதால் அழிந்தொழிந்தார் அந்தோ! அந்த
  மூவரசை யழித்தவளைக் கொடியள் என்பேன். 1

வடபுலத்து மன்னரையும் விட்டா ளல்லள்
  வாழ்விழந்த பாண்டவர்க்கும் நூற்று வர்க்கும்
கெடுமனத்தைப் பகையுளத்தைத் தந்து நின்றாள்
  கிளைஞருக்குள் பகைமூட்டி அழித்தொ ழித்தாள்;
அடுகுணத்துச் செஞ்சீனர் அண்டை நாடர்
  அகப்பகையாய் நமதுபனி மலையின் பாங்கர்
இடர்விளைக்க வழியமைக்கச் செய்த வள்யார்?
  இழிபழியை அவர்க்களித்தாள் அவளே யன்றோ? 2

உலகத்தை ஒருகுடைக்கீழ் ஆள எண்ணி
  ஒவ்வாத போர்வெறியர் உலகில் யாண்டும்
கலகத்தை விளைவித்துப் போர ரக்கன்
  கடுவாயில் போய்வீழ்ந்தார்; அவரை எல்லாம்
இலவுக்குக் காத்திருந்த கிளிபோ லாக்கி
  ஏலாத பேராசை உள்ளத் தூட்டி
நலமழித்த நிலமகளை எப்பேர் சொல்லி
  நானழைப்பேன்? மாபாவி என்ப தல்லால். 3

பாவமவள்! நிலமகளா குற்றஞ் செய்தாள்?
  பாராள வந்தவர்தாம் குற்றஞ் செய்தார்;
யாவுமவர் ஆசையினால் வந்த தீமை
  அதற்கவளா பொறுப்பாளி? இல்லை இல்லை;

காவலர்கள் [1]பிறர்க்குரியாள் தோள்வி ழைந்தார்
கருத்தழிந்தார் உருத்தெழுந்தார் தாமே மாண்டார்;
மேவுகின்ற ஆடவர்தாம் நல்ல ரானால்
மெல்லியலாம் நிலமகளும் நல்லள் ஆவாள். 4

நிலமகளின் ஆசையினாற் கொடிய மாந்தர்
நெடுகிலுமே செய்தீமைக் களவே யில்லை;
பலவுயிரும் பலபொருளும் பிறப்ப திந்தப்
பரந்துபடும் நிலத்திற்றான்; பின்னர் அந்தக்
குலமுழுதும் மறைந்தொடுங்கி மாய்வ தெல்லாம்
கூறுமிந்த நிலத்திற்றான்; இதைம றந்து
நிலமுழுதும் தாமுண்ண முயலு கின்றார்
நிலையாகத் தமதென்றும் எண்ணு கின்றார். 5

பெரும்பொருளும் உயர்மனையும் வயலும் இன்னும்
பேறனைத்தும் பெற்றாலும் இறுதிக் காலம்
வரும்பொழுது மனிதனுக்குச் சொந்த மென்று
வாய்த்தநிலம் ஆறடிதான்; அதைம றந்து
வரும் மனிதன் வாழ்வெல்லாம் பிறர்நி லத்தை
வளைப்பதற்கே முயல்கின்றான்; வளைத்த பின்னும்
அரும்புகிற ஆசையைத்தான் காட்டு கின்றான்
ஆசைக்கோர் அளவில்லை அதனாற் போலும். 6

தோண்டுங்காற் பொன்தருவாள் சோர்வ கற்றித்
துளைத்தெடுத்தால் தந்திடுவாள் எண்ணெய்; மேலும்
வேண்டுங்கால் நிலக்கரியும் ஈவாள்; ஆழ
வெட்டுங்கால் புனல்தருவாள்; ஆழ்ந்த கழ்ந்து
கீண்டுங்கால் இரும்புமுதற் கனிக ளெல்லாம்
கிடைக்கஅருள் நல்கிடுவாள்; ஏர்மு கத்தால்
தீண்டுஞ்சால் வழியெல்லாம் பயிர்கள் காட்டிச்
செழித்திருப்பாள் வளமெல்லாம் கொழித்தி ருப்பாள். 7

கனிதருவாள் காய்தருவாள் வாழும் வண்ணம்
காலமெலாம் உயிர்தருவாள்; உடல்வ ருத்தி
இனிதருளும் ஈகையினால் அவளை [2]வள்ளி
எனுஞ்சொல்லாற் புகழ்ந்துரைக்க ஆசை தோன்றும்
நனிமுயன்றே பாடுபடின் பொருளை வாரி
நல்கிடுவாள்; உழைப்பின்றி அயர்ந்து நின்றால்
முனிவுகொடு பொருள்குறைப்பாள்; உழைப்ப றிந்து;
முதல்கொடுக்கும் முதலாளி என்றுஞ் சொலவேன்; 8

நமக்கென்றே இருப்பவளை வாழ்நா ளெல்லாம்
நலிவுறுத்தி வருகின்றோம்; தலையி டத்துச்
சுமக்கவென மரம்வைத்தோம் மனைகள் கட்டத்
தூண்வைத்தோம் கல்வைத்தோம் காலும் வைத்தோம்
எமக்கென்ன என்றவள்மேல் உமிழு கின்றோம்
இரும்பெடுத்தே அவளுடலை அகழு கின்றோம்
சுமக்கின்றாள் பொறுக்கின்றாள் பொறுமை சாலி
தொழிலாளி போலிருக்குந் திறமை சாலி. 9

கடல்சுமந்தாள் மலைசுமந்தாள் கான்சு மந்தாள்
கால்நடைகள் பலசுமந்தாள் மாந்தர் என்ற
உடல்சுமந்தாள் வயல்சுமந்தாள் நதிசு மந்தாள்
ஊர்சுமந்தாள் நகர்சுமந்தாள் செடிசு மந்தாள்
குடல்சுமந்து பெற்றெடுத்த அன்னை யில்லாக்
குலப்பிள்ளை போலாகி நின்றாள் அந்தோ!
மிடல்சுமந்த அவளுருத்துச் சினந்து நின்றால்
மேலாளர் வாழ்வெங்கே அவளே வெல்வாள். 10

---

**பாடற் குறிப்பு:–** ஈரோட்டுக் கவியரங்கில் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. பிறர்க்குரியாள் – பிறர்க்குரிய நிலமகள்.
2. வள்ளி – வள்ளன்மையுடையவள்.

## 46. போலிக் குடும்பம்
(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)

கலிவெண்பா

காற்றையே விஞ்சுங் கடுவேகங் கொண்டிலங்கும்
மேற்றிசையார் தந்தஒரு மேலான ஊர்திதனில்
முன்னே கணவன் முறுக்கோ டமர்ந்திருப்பான்
பின்னே மனையாள் பெருமிதத்தில் வீற்றிருப்பாள்
வேத்தால் ஆடை விலகுவதும் தான்ஓராள்
மோகத்தி னுள்ளே முழுகி எழுந்தவள்போல்
கையொன்றால் சுற்றிக் கணவன்றன் மெல்லிடையை
மெய்யொன்றச் சாய்ந்து மிடுக்கோ டணைத்திருப்பாள்
கட்டிப் பிடித்துக் களிப்போடு போமிவரை
எட்டி நடப்போர் இருகண்ணால் பார்த்திருந்(து)
"ஒட்டி உறவாடும் உள்ளன் புடையரிவர்!
விட்டுப் பிரியாத விந்தைமிகும் அன்றிலிவர்!
ஈதன்றோ நற்குடும்பம்! இக்குடும்பம் போற்குடும்பம்
யாதொன்றுங் கண்டதிலை" என்றே நயந்துரைப்பார்;
போகும் வழிப்படுவோர் போற்றிப் புகழ்ந்துரைக்க
வேகம் மிகக்கொண்டு வீதியெலாஞ் சுற்றியபின்
வீட்டிற் புகுந்தவுடன் வேகங் குறைந்துவிடும்
ஏட்டிக்குப் போட்டி! எலிபூனை ஆகிடுவர்;
சீறி விழுவார் சிறிதேனும் அன்பறியார்
மாறி நடப்பார் மனைவி கணவனெனும்
பேரைக் கடப்பார் பெருமைமிகும் இல்லறத்தின்
சீரை ஒருசிறிதும் சிந்தித்துத் தாம்நடவார்;
காட்சிக் குடும்பமெனக் கட்டுரைப்ப தன்றிஇது
மாட்சிக் குடும்மெனும் [1]மாற்றஞ் சொலப்படுமோ?
மாலை முடித்த மணவாளன் தான்கொண்ட
வேலை முடித்துப்பின் வீடு திரும்புங்கால்
மாலை யடுத்திருக்கும் மங்கிருளும் சூழ்ந்திருக்கும்
சீலை யுடுத்திருக்குஞ் சேயிழையாள் மட்டுமிராள்;
மெய்சோர்ந்து கைசோர்ந்து மேலும் மனஞ்சோர்ந்து;
.பைசோர்ந்து வந்தானைப் பார்த்து வரவேற்க,
உண்ணுஞ் சுவைநீர் உவந்து கொணர்ந்துதர.
எண்ணங் களிக்க, இனிய மொழிசொல்ல,
இல்லாள் மனையகத்தே இல்லா நிலைகண்டு
நல்லான் அருகிருந்த நாற்காலி மேலமர்ந்தான்;
தொங்குசிறு பையொன்று தொங்குகிற கையுடையாள்
தங்குமொரு சிற்றுடையுந் தாங்காத மெய்யுடையாள்
வெள்ளைப் பொடியால் விளங்கும் முகமுடையாள்
அள்ளிச் சுருட்டி அமைத்த குழலுடையாள்
ஆடி அசைந்தே அழகுமயில் போல்வருவாள்;
வாடி அமர்ந்திருப்போன், வந்தாள் முகம்நோக்கி,
"எங்குநீ சென்றிருந்தாய்? இந்நேரம் ஆனபினும்
தங்கி வருவதுமேன் தையால்" எனக்கேட்டால்
"மாதர்கழ கத்தில் மனைவிமார் தங்கடமை
ஓதுதற்குச் சென்றிருந்தேன் ஊர்மெச்சப் பேசிவந்தேன்;
கற்பென்றா லென்ன? கணவன் உரிமைஎன்ன?
பொற்புடைய மாதர் பொறுப்பென்ன? என்றெல்லாம்
சொற்பொழிவு செய்தேன் சொலற்கரிய கைதட்டல்!
அற்புதமே என்ன அமைந்துவிட்ட" தென்றுரைப்பாள்;
இப்படியும் நாட்டில் இயங்கும் குடும்பங்கள்
பற்பலவும் இந்நாளில் பார்த்தல் எளிதாகும்;
செல்வப் பெருக்காலுங் கல்விச் செருக்காலும்
பல்வகைய நாகரிகப் பாங்குக்கும் ஆட்பட்டுச்
சீரழிந்து போன சிலகுடும்பம் உள்ளதனை
ஊரறியும் நாடறியும்; ஒவ்வாக் குடும்பமிது;
மண்ணில் அடிவைக்க மாட்டாமல், உண்டவரை
விண்ணில் மிதக்கவைக்கும் விந்தைக் குடிபழகி

வந்தோன் குடும்பம், வருகின்ற நாளெல்லாம்
நொந்தே அழியும்; நொடிப்பொழுதும் இன்பமிலை;
கட்டிவந்த தன்மனையாள் கன்னம் முதுகெல்லாம்
கொட்டிவரும் மத்தளந்தான் கொண்டவன் கைகளுக்கு;
தற்கொண்டான் கொட்டுகிற தாளந் தவறாமல்
இற்குரியாள் ஓவென் றிசைப்பாள் அவலப்பண்;
பாழுங் குடியாற் பழுதுபடும் அக்குடும்பம்
நாளும் இளிவரலால் நைந்துபடும்; அவ்வில்லில்
வீரம் இருக்கும் வெகுளி உடனிருக்கும்
நேரஞ் சிறிதானால் நீள்அழுகை தானிருக்கும்
அச்சம் இருக்கும் அடுத்து நகையிருக்கும்
மெச்சும் உவகையதும் மேவிக் கலந்திருக்கும்
எண்சுவையுங் கூடி இயங்குமொரு நாடகத்தைப்
பண்சுவையுஞ் சேர்த்துப் படைக்கும் மதுக்குடும்பம்;
கல்லாக் குடும்பத்துங் கற்ற குடும்பத்தும்
எல்லாக் குடும்பத்தும் இச்சிறுமை காண்பதுண்டு;
வையத்துள் வாழ்வாங்கு வாழாத ஓர்குடும்பம்
நையப் புடைக்கும் நரகம் எனவாகும்;
எங்கோ நரகொன் றிருக்கின்ற தென்றுரைப்பார்
இங்கேதான் அந்த இடர்நரகுங் காண்பதுண்(டு)
இல்லாள் மனைமாட்சி இல்லாளேல் அவ்வாழ்க்கை
பொல்லா நரகாகும் பொன்றாத் துயராகும்;
பேரின்ப வீடெனவும் [2]பீழை யுறுநரக
ஊருண் டெனவும் உரைத்திடுவர் கண்டதிலை:
ஆனாலும் நம்மருகில் அவ்விரண்டும் உண்டென்று
காணா தலைகின்றோம் கண்ணிருந்துங் காணுகிலோம்:
போலித் தனமெல்லாம் போற்றித் திரியாமல்
வேலிக்குள் நின்றே விளைபயனைத் துய்த்திடுவோம்:
அன்பே துணையாக ஆற்றுங் குடும்பத்தில்
இன்பம் நிலைக்கும் இனிது

---

**பாடற் குறிப்பு:–** சிவகங்கை மன்னர் கல்லூரிக் கவியரங்கில் பாடியது–29.1.1972.

**அருஞ்சொற் பொருள்:–**
1. மாற்றம் – சொல். 2. பீழை – குற்றம், துன்பம்.

## 47. சமுதாய வீதியிலே
**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

எண்சீர் விருத்தம்

சாதிமதம் வேர்விட்டுக், கூடி நின்ற
சமுதாயம் சீர்கெட்டுப், பிளவு பட்டு,
மோதிவரும் பகையுற்றுத் தாழ்வும் உற்று
முன்னேறும் நெறிகெட்டு, மிடியும் பட்டு,
[1]மேதியினும் கீழாகி, உணர்வு கெட்டு,
மேலான மதிகெட்டு, மானம் விட்டு,
மேதினியில் அடிமைஎன உரிமை கெட்டு,
மெய்சுமந்து மாந்தரென வாழ்ந்து வந்தோம். 1

[2]மண்சுமந்த தோள்களிலே வீரங் கொண்ட
மாமன்னர் வழிவந்தோர், சங்கம் ஏறிப்
பண்சுமந்த பாடலினால் உலகை யாண்ட
பாமன்னர் வழிவந்தோர், தமிழ மாந்தர்;
கண்சுமந்து வந்தாலும் பார்வை கெட்டுக்
காலிடறி வீழ்ந்தனரே என்று நெஞ்சில்
புண்சுமந்து நொந்தெழுந்து புரட்சி செய்யப்
பொங்கிஎழுந் தரியேற்றைப் போல வந்தார். 2

வெண்தாடி வேந்தரவர், ஐயா என்றே
விழைந்தழைக்கும் கிழவரவர், பெரியார் என்றே
பண்பாடிப் போற்றுகின்ற தலைவர், எங்கள்

பகுத்தறிவுப் பகலவனார், தமிழர் பண்பு
மண்மூடிப் போகாமல் காக்க வந்த
மாவீரர், பாழ்பட்ட சமுதா யத்தின்
கண்மூடிப் பழக்கத்தால் எழுந்த கோட்டை
கலகலத்தே இடிந்துவிழச் செய்த தீரர். 3

அப்பெரியார் திருப்பெயரைத் தலையில் தாங்கி,
[3]ஆளுடைய பிள்ளையிவர் அரவ ணைப்பால்
ஒப்பரிய நடைமுறையில் இயங்கு கின்ற
ஒளிநிறுவுங் கல்லூரி யதனிற் கல்வி
[4]தப்பிரியப் பயில்கின்ற இளைஞர் நீவிர்
சமுதாயச் சிந்தனையை மனத்திற் கொண்டீர்;
அப்பெரிய மகிழ்ச்சியினால் வாழ்த்து கின்றேன்
அடடாஓ சமுதாயம் வாழும் என்றே. 4

எதைஎதையோ சிந்திக்கும் இளைஞர் கூட்டம்
இருக்கின்ற நிலைகண்டு வருந்தி நெஞ்சம்
பதைபதைக்கும் இயல்புடையேன் ஆனால் நீவீர்
பயனுள்ள சிந்தனைக்கு வந்து விட்டீர்;
இதைநினைந்து மகிழ்கின்றேன்; இன்று நீங்கள்
இளைஞரெனும் நிலையிலுளீர், நாளை நாட்டின்
விதையனையீர், வேரனையீர், வளர்ந்த பின்னர்
விடுதலையின் பயன்நுகரும் தலைவர், ஆவீர். 5

இன்றுள்ள சமுதாய வீதி தன்னில்
எங்கேனும் நல்லொழுக்கம், உரிமை வேட்கை
ஒன்றுள்ள தாவென்று தேடிப் பார்த்தேன்;
ஒளிந்திருக்கும் இடங்காண முடிய வில்லை;
நன்றுள்ள பொதுநலந்தான் மாந்தர் நெஞ்சில்
நலம்பெற்று வளர்கிறதா என்று பார்த்தேன்;
நின்றுள்ள நிலைகாணேன்; தன்ன லந்தான்
நிலைபெற்றுக் கோலொச்சக் கண்டு நொந்தேன் 6

வீதியிலே சமுதாயம் நிற்கக் கண்டேன்
விலைபேசிப் பண்பாட்டை விற்கக் கண்டேன்;
போதனையே செய்வாரைக் காணு கின்றேன்
புகன்றபடி ஒழுகுபவர் எவருங் காணேன்
ஏதினிமேல் நல்வாழ்வு? மாந்தர் நெஞ்சில்
இருளகன்று சுடரொளிதோன் றாதோ? என்று
வேதனையே கொள்கின்றேன் நிலையிற் கெட்ட
விலங்கியல்பு மானிடரை நினையும் போது; 7

போலிகளே சமுதாய வீதி தன்னில்
பொன்னோடும் புகழோடும் உலவல் கண்டேன்;
மாலையெலாம் அவர்பெறுவர் மதிப்பும் கொள்வர்;
மாமேதை என்றெல்லாம் விருதும் கொள்வர்;
மேலவரோ எள்ளலுற்றார், ஏசல் பெற்றார்,
மிதிபடுமோர் பொருளானார், தாழ்வே கண்டார்;
[5]சாலியிலே பதருக்கு மதிப்பைக் கண்டேன்
சாறறியா வெம்பலுக்கும் மதிப்பைக் கண்டேன் 8

சீர்கெட்ட சமுதாய வீதி தன்னில்
சிவப்புநிற விளக்குகளே ஒளிரக் கண்டேன்
கூர்கெட்ட மாந்தருக்கு நெறியைக் காட்டிக்
கூப்பிடுமோர் பச்சைநிற விளக்கைக் காணேன்;
தேர்விட்ட நெடுந்தெருவில் மேடு பள்ளம்
தெரியாமல் படர்கின்ற புதர்கள் கண்டேன்;
வேர்கெட்ட எட்டிக்கு நீரை வார்த்தார்
விழலுக்கே நீர்பாய்ச்சும் பேதை மாந்தர். 9

கடவுளென வேதமெனச் சாத்தி ரங்கள்
காட்டுகிற நெறிகளெனச் சொல்லிச் சொல்லி
மடமையிலே மூழ்கிஒளிர் மதியைத் தேய்த்து

மாந்தரையே மாற்றுகிற கயமை கண்டேன்;
இடமுடைய மண்மீதில் நடப்ப தற்கோர்
ஏற்றநெறி காட்டாமல் விண்ணை நோக்கிப்
படர்வழியைக் காட்டுகிறார்; காவி ரித்தாய்
[6]பாலிருந்தும் கானலையே காட்டல் கண்டேன். 10

ஒருத்தியென ஒருவனென உரைத்த காதல்
உயர்வாழ்வை அகப்பொருளென் றொருபேர் தந்து
பொருத்தமுற நம்முன்னோர் உரைத்து வைத்தார்;
புதியஅலை எனும்பெயரால் படமெ டுப்போர்
கருத்திலராய்ப் புறப்பொருளா மாற்றி விட்டார்
காசுக்கு வளைவதற்குக் கூசாப் பெண்டிர்
உருத்தெரிய மேனியெலாம் உலர விட்டால்
உருப்படுமோ சமுதாயம்? என்று நொந்தேன் 11

கலைக்கோட்டம் என்றிருந்தேன் காமக் கோட்டக்
கதவன்றோ திறந்துவிட்டார்; இளைஞர் அந்தப்
புலைக்கோட்டம் புகுவதற்கே ஆசைப் பட்டுப்
பொல்லாத கனவுகளைக் கண்டு கெட்டார்;
வலைக்கோட்டு மானினம்போற் சிக்கிக் கொண்ட
வஞ்சியரும் தறிகெட்டுத் திரிதல் கண்டேன்;
விலைப்பாட்டுக் கவிஞரெலாம் எழுதும் பாட்டை
விலைமாதும் கேட்பதற்குக் கூசி நிற்பாள். 12

காதலெனும் மென்மலரைக் கசக்கி மோந்து
காட்டுகிற திரைப்படங்கள் உலவி வந்தால்
ஏதமுறத் தோலுரித்துக் காட்டும் பாங்கில்
எழுதிவரும் திரைப்பாட்டைக் கேட்டு வந்தால்
தீதகலக் காந்திநபி ஏசு புத்தர்
தெருத்தெருவா நின்றிருந்து போதித் தாலும்
ஓதுபயன் உண்டாமோ? தணிக்கை செய்வோர்
ஒளிபெற்ற கண்பெற்றால் நன்மை உண்டாம். 13

---

**பாடற் குறிப்பு:—** திருச்சி பெரியார் ஈ.வே.ரா கல்லூரிக் கவியரங்கில் பாடியது — 1.3.1975.
**அருஞ்சொற் பொருள்:—** 1. மேதி — எருமை. 2. மண் சுமந்த — நிலத்தை ஆண்ட. 3. ஆளுடையபிள்ளை — கல்லூரி முதல்வரின் பெயர்.
4. தப்பு இரிய — பிழை நீங்க. 5. சாலி — நெற்பயிர். 6. பாலிருந்தும் — பக்கத்திலிருந்தும்.

## 48. திரையுலகக் கற்பு
**(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)**

தென்னாட்டுப் பண்பனைத்துஞ் சேர்த்தெடுத்துக் காணுங்கால்
இந்நாட்டுக் கற்புநெறி ஈடில்லாப் பொற்புநெறி
என்றே இலக்கியங்கள் எக்காலும் ஓதிவரும்;
இன்றோ அதன்நிலைதான் ஏளனத்தின் கூடாரம்!
ஏற்றமிகும் கற்புநெறி இங்கே திரையுலகில்
நாற்றம் எடுத்தொழிய நாடகங்கள் ஆடுகின்றார்;
யாரும் அறியா தகத்தே நிகழ்வதெலாம்
பாரும் எனக்காட்டிப் பண்பை அழிக்கின்றார்;
கூடும் அகத்திணையைக் கூத்தாட்டக் காரரிவர்
ஆடும் புறப்பொருளா ஆக்கிப் படைக்கின்றார்;
மேடை மிசையேறும் மெல்லியலார் நல்லுடலில்
ஆடை அணிவதற்கே அச்சப் படுகின்றார்;
சுட்டெரிக்கும் போதில் சுருண்டுவிழும் ஒர்புழுப்போல்
வட்டமிட்டு மேனி வளைத்து நெளிந்தவர்தாம்
தாயாகும் பண்பைத் தவிடுபொடி யாக்கிவிட்டுப்
பேயாட்டம் ஆடிப் பெரும்பழியைச் சேர்க்கின்றார்;
கற்புநெறி யிங்கே கடைச்சரக் கானதலால்
மற்றபடி உண்டோ மதிப்பு?

---

**பாடற் குறிப்பு:—** 1.3.1970 ஆம் நாள் பாடியது.

## 49. இன்றைய மனிதன்
(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)

பூவுலகங் கண்மலரப் பொங்குங் களிசிறக்கப்
[1]பாவுங் கதிர்பரப்பிப் பைய வருங்கதிரோன்
நட்ட நடுவானில் நண்ணிவெயில் விட்டெரிக்கும்
பட்டப் பகலில் பலபேர் நடமாடும்
வெட்ட வெளியில் விரிந்த நடுத்தெருவில்
[2]முட்ட நரைத்த முதுமைப் பெருங்கிழவர்
தாங்கும் இடக்கையில் தண்டூன்றித் தந்தலைமேல்
ஓங்கும் வலக்கையில் ஓர்விளக்கை ஏந்திநின்று
முன்னே வருவோர் முகமெல்லாம் பார்த்தலுத்துப்
பின்னேயுந் தேடிஅவர் பேதலித்து நின்றிருந்தார்;
ஆண்டு வருவோர்தாம் அக்கிழவர் பாலணுகி,
'ஈண்டெதனைத் தேடி இளைத்தீரோ' என்றார்க்குத்
'தேடுகிறேன் மாந்தனைத்தான் தேடி அலைந்தலைந்து
வாடுகிறேன்' என்றுரைத்தார்; 'வெய்ய பகல்தனிலோ
கையில் விளக்கெடுத்துக் காணப் புறப்பட்டீர்?
வெய்யில் கொடுமை விளைத்த புதுமையிதோ?
ஒன்றும் புரியவிலை உம்செயலே விந்தையதாம்'
என்று பலசொல்லி எள்ளி நகைத்தார்கள்;
'எள்ளி நகைப்போரே இவ்வண்ணந் தேடினுமே
உள்ளும் மனிதனைநான் ஒரிடத்துங் காண்கிலனே'
என்று விடையிறுத்தார் எல்லாந் தெரிகிழவர்;
ஒன்றுங் கதையிதனுள் உண்மைப் பொருளென்ன?
கட்டுடலுங் கைகாலும் கண்ணும் பிறவுறுப்பும்
மட்டும் உடையானை மாந்தன் எனப்புகலார்;
ஒப்பிலா நல்மனமாம் ஒருறுப்புக் கொண்டவனே
இப்புவியில் வாழ்மனிதன் என்றுரைக்கத் தக்கவனாம்;
பட்டுடையும் வானுயர்ந்த கட்டடமும் எக்காலும்
தட்டறியாச் செல்வமுடன் மற்றுமுள எப்பொருளும்
பெற்றவனை நாகரிகம் பெற்ற மனிதனெனச்
சொற்றவரைக் கண்டதிலை; துய்ய அகத்துறுப்பாம்
அன்புமுதற் பண்புகட் காளாகி நின்றானே
மன்பதையுள் போற்றும் மனிதன் எனப்படுவான்;
பண்புமனம் அற்றவரே பார்முழுதும் ஈண்டிவிட்டார்
பண்புமனம் கொண்டவரைப் பார்த்தல் அரிதாகும்
என்னுங் கருத்தை எடுத்து விளக்குவதே
முன்னங் கதையின் முழுமைப் பொருளாகும்;
தென்னாட்டு முன்னோர் திணையிரண்டு சொல்லிவைத்த
பண்பாட்டை எண்ணிப் பகுத்துணர நாம்மறந்தோம்
மக்கள் உயர்திணையாம்; மாண்பார் உயர்ஒழுக்கம்
மிக்கமையால் அத்தகுநல் மேன்மைநிலை பெற்றார்கள்;
தேன்தமிழில் அந்தத் திணையென்னுஞ் சொல்லுக்குள்
ஆன்ற பொருள்ஒழுக்கம்; அவ்வொழுக்கம் இல்லாரேல்
மக்கள் நெடிலாகி மாக்கள் எனவாகித்
தக்க நிலையின்றித் தாழ்ந்த திணையாவர்;
மக்கள் வடிவொன்றால் வாய்க்கா துயர்திணைதான்
மக்கள் இயல்பதுதான் மாண்பார் உயர்திணையாம்
என்னுங் கருத்தை இலக்காக்கி வாழ்ந்தோமா?
இன்னும் மனிதரெனும் பேரால் இயங்குகிறோம்;
விண்ணிற் பறக்கின்றோம் வெற்றி சிறக்கின்றோம்
எண்ணிற் பெருமைஎலாம் எண்ணில் அடங்காவே!
ஆழ்புனலில் மூழ்குகிறோம் ஆங்கெழிலா நீந்துகிறோம்
சூழ்பெருமை அத்தனையும் சொல்லுக் கடங்காவே!
என்று பறைசாற்றி எக்களித்து நிற்கின்றோம்.
நன்றுநன் றென்றாலும் நாணும் நிலையிலுளோம்;
நம்மிற் பறவையினம் நன்றே பறப்பதுண்
டிம்மி யளவும் இரும்புனலில் நீந்துவதில்
மீனிற் சிறக்கவிலை மேன்மை நமக்கேது?

வானிற் படுதோல்வி! வார்புனலில் அத்தோல்வி!
விண்ணகத்தும் நீரகத்தும் வெற்றி இலைஎனினும்
மண்ணகத்து வெற்றிஎதும் வாய்த்ததுவோ? வாயில்லை;
காட்டில் விலங்கினமுங் கண்டபடி தானடக்கும்
நாட்டில் திரிகின்ற நம்நடையும் அப்படியே;
நல்ல நடையுண்டா? நம்நடையில் செம்மையுண்டா?
இல்லை பொலிவுண்டா? ஏனோ முடமானோம்?
கற்கின்றோம் நூல்கள் கசடறவே, கற்றவணம்
நிற்கின்றோம் என்றுரைக்க நீதியுண்டா? நன்கு
நடக்காமல் நிற்கின்றோம்; நாவன்மை கொண்டோம்
அடுக்காத தீச்செயல்கள் ஆயிரமே செய்தாலும்
மூடி மறைப்பதற்கே முன்கற்ற கல்வியிலே
தேடி அலைந்து தெரிவிப்போம் சான்றுகளும்;
கற்றார், பழிக்குக் கடுகளவும் நாணவிலை;
மற்றார் அதற்கு மனங்கூசி நிற்பர்;
உரிமை உரிமைஎன்றே ஓயாமற் சொல்லி
மருவும் உரிமை மனிதர்பொதுச் சொத்தாக
எண்ணா தலைகின்றோம் ஏய்த்துத் திரிகின்றோம்
பண்ணா தனவெல்லாம் பண்ணி மகிழ்கின்றோம்
வாழ்வின் நலமெல்லாம் வாய்க்க முயன்றிடுவோம்
தாழ்வு வருமேல் தரியோம் அதுமுறைதான்;
ஆயினுமவ் வாழ்க்கை அயலவர்க்கும் வேண்டுமன்றோ?
தீயனவே செய்ததனைத் தீய்த்துக் கரியாக்கி
மாய்ப்பதுதான் நல்லதொரு வாழ்வாமோ? அன்னவரை
ஏய்த்துப் பிழைப்பதுதான் ஈங்கினிய வாழ்வாமோ?
மாண்புயர்ந்த காதல் மலரைவிட மெல்லிதெனக்
காண்பதுதான் நம்முன்னோர் கண்டுரைத்த நல்வழியாம்;
இல்லறத்து வாழ்வில் ஒருவன் ஒருத்திஎன்ற
நல்லறத்தைச் சொல்லி நடந்தவரும் நம்முன்னோர்;
நாகரிகப் பேரால் நலமறியாப் பாழுக்கு
வேகமுடன் ஏகுகிறோம்; வீணை நரம்பதனை
மெல்ல வருடாமல் வேல்கொண்டு சாடுகிறோம்;
நல்லதொரு பூவை நசுக்கிக் கசக்கிவிட்டுச்
சொல்லரிய தேன்சுவைக்கச் சூழுகிறோம் அந்தந்தோ!
இல்லறத்தில் வாழும் இருவர் பெறுமின்பம்
ஈங்குத் தனியுடைமை; இவ்வரிய செம்மைநெறி
நீங்கிப் பொதுவுடைமை யாக்க நினைக்கின்றோம்
இன்பம் பெறவே இழிசெயல்கள் அத்துணையும்
வன்பிற் புரிந்திங்கு வாழ்கின்றோம்; நாம்மனிதர்!
நட்பைப்போல் நற்பண்பு நானிலத்துக் கண்டதிலை
அப்பப்பா அவ்விடத்தும் ஆற்றுகிறோம் வஞ்சகங்கள்;
நம்மைத் தெளிந்திருக்கும் நண்பர்க்குந் தீமைசெயல்
செம்மை நெறிஎன்றே செய்து வருகின்றோம்;
எள்ளுங் கயமை எவையுளவோ அவ்வெல்லாம்
உள்ளம் உவந்தே உயர்வாக ஆற்றும்நமை
மக்களே போல்வரென வைத்திருக்கும் இவ்வுலகம்
மக்களெனப் போற்றி மதித்து வழங்காது;
நாட்டில் பொதுத்துறைகள் நல்ல பணித்துறைகள்
வேட்டம் புரியிடம்போல் தேட்டை யடிக்கின்றோம்;
நீதி யுரைக்கும் நெடுமன்றில் பேரறத்தை
மீதி யிருக்கத்தான் விட்டோமா? நம்மாட்சி!
ஆண்டவன் கோவிலுக்குள் ஐயகோ! நாம்புகுந்து
வேண்டா வினையெல்லாம் செய்யாமல் விட்டோமா?
செய்யாத தீமையிலை செய்யா இடமில்லை
நையாமல் நைந்துமனம் நாளும் உருகுகிறேன்;
நீதிகெடும் மாந்தர்தமை நெஞ்சம் நினைந்துவிடின்
வேதனைகள் கொஞ்சமல்ல வெந்துழன்று வாடுகிறேன்;
பண்புடையார்ப் பட்டுண் டுலகம் எனவுரைத்த
பண்புணர்ந் தாற்றுவமேல் பாரில் உயர்ந்திடுவோம்;
ஆதலினால் பண்புயர்க அன்புயர்க என்றுசில
ஓதி முடித்தேன் உவந்து

---

**பாடற் குறிப்பு:–** திருவானைக்கா தமிழ்ப்பேரவைக் கவியரங்கில் பாடியது– 25.4.1965.

**அருஞ்சொற் பொருள்:–**

1. பாவும் கதிர் – பரவிய ஒளியை. 2. முட்ட – நிறைய.

## 50. வெம்புவான் கம்பன்
**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

கலிவெண்பா

செந்நெல்லும் பைங்கரும்புஞ் சேர்த்து விளைவித்துப்
பொன்கொழிக்கச் செய்தமையாற் பொன்னியெனும் பேர்கொண்டாள்;
காணும் இடமெல்லாங் காவிரித்துச் செல்லுதலால்
பேணுமொரு காவிரியாம் பேர்பூண்டாள்; நாளெல்லாம்
வற்றா வளஞ்சரந்து வாழ்வளித்துக் காப்பதிலே
பெற்றாள் எனவுரைக்கப் பெற்றாளவ் வாரணங்(கு)
உச்சி முடியிருந் தோடிவருங் கங்கையினும்
மெச்சும் புனிதத்தால் மேம்பாடு கொண்டவளின்
[1]கால்பட்ட மண்ணெல்லாம் [2]கஞ்சமுறு செல்வமகள்
கால்பட்டுப் பூத்துக் களிநடனஞ் செய்ந்நாடு
சால்பட்ட செய்யெல்லாஞ் [3]சாலி தலைசாய்த்து
வேல்தொட்ட கண்மடவார் வெட்குதல்போற் காட்சிதரும்
வந்தார் பசிநீக்கி வாட்டந் தவிர்க்கின்ற
நந்தா வளநாடு நன்செய்ப் பெருநாடு;
நாற்று வளத்தாலே நானிலம் போற்றும்வணம்
சோற்று வளம்படைத்த சோணாட்டுப் பேரூரில்
பாட்டரசன் தான்பிறந்தான் பன்னும் புகழ்ச்சோழ
நாட்டரசன் வேத்தவையில் நண்ணித் தமிழ்வளர்த்தான்;
கூட்டரசு கொண்டிலங்கு கோமான் சடையப்பன்
காட்டியநல் லன்பால் கலைக்கோவில் ஒன்றெடுத்தான்;
[4]நாட்டரசன் கோட்டை நகர்விடுத்துத் தென்பாண்டி
நாட்டரசன் கோட்டை நகரடைந்தான்; அப்பதியில்
கம்பன் கதைமுடித்தான் காயச் சுமைவிடுத்தான்;
நம்பன் புகழ்நிற்க நண்ணினான் கல்லறைக்குள்;
சாவேந்திப் போய்விட்ட சான்றோன், கவியுலகிற்
பாவேந்தன் என்றுரைத்த பாட்டாளி, இவ்வுலகைக்
காண நினைந்தின்று கம்பன் வருவானேல்
நாணம் மிகக்கொண்டு நம்மை நகைப்பானே!
மாந்தர் உருவுடையார் மானஞ் சிறிதுமிலார்
போந்து புரிகின்ற புன்மையெலாங் காணின்
மகிழ்வானோ? அன்றி மனமுவந்து நெஞ்சாற்
புகழ்வானோ? சற்றே புகலுங்கள் பொய்வேண்டா;
நம்பவா சொல்கின்றீர்? நம்செயலைக் கண்டவுடன்
வெம்புவான் வெம்புவான் வெம்பியே நொந்திடுவான்;
ஆயிரம்பல் லாயிரமா ஆக்கிவைத்த பாக்கடலுள்
போயிறங்கி முக்குளித்துப் புத்தம் புதுச்சுவையை
மாந்திக் களித்தோர் மதிமயங்கி அக்கடலுள்
நீந்திக் குளித்ததற்பின் நீள்கரையில் ஏறாமல்
அந்தச் சுவைமயக்கில் ஆழ்ந்து திளைத்தவராய்ச்
சொந்தக் கவிபுனைந்து சொல்லரசன் கம்பன்றன்
பாட்டுக்குள் ஏற்றியே பாடிக் களித்தார்கள்;
[5]கேட்டுக் கவிகளைத்தான் கேட்டுப் புலவனிவன்
வெம்பா திருப்பானோ? வெம்புவான் வெம்புவான்
அம்மா அவன்வெம்பும் வேதனைக்கோ ரெல்லையிலை:
அச்சுப் பொறியில்லாக் காலம் அவன்காலம்
நச்சிப் படியெடுத்தார் நாவலன்றன் பாடல்களை
ஏட்டில் எழுதும் எழுத்தாணிப் போக்கினிலே
ஓட்டிக் கெடுத்தார்கள்; ஓதியநற் பாடல்களை
வாய்மொழியாற் சொன்னவரும் வாய்போன போக்கினிலே
போய்மகிழ்ந்தார்; பின்னர்ப் புகுந்துவிட்ட பேதங்கள்
பாட்டுக்கு நூறாய்ப் பரந்து விரிந்தனவாம்;
நாட்டுக்குள் கம்பன் நயந்து வருவானேல்
பாட்டுள் கிளைத்தெழுந்த பாடத்தைத் தன்செவியாற்
கேட்டுக் களிப்பானோ? கேளாமல் வெம்பிடுவான்;

ஆய்ந்துரைத்த தன்பாவில் யார்யாரோ கைவைத்துத்
தோய்ந்துரைத்த பாடமிது தூயதிது வென்றே
திருத்தங்கள் செய்வதையும் சிற்சிலபா கம்பன்
விருத்தங்கள் அல்லவென வெட்டிக் கழிப்பதையும்
கம்பனவன் வந்திங்குக் காண்பானேல் “இவ்வண்ணம்
வம்புகள் செய்வதற்கு வாய்த்த முறையென்ன?
இன்றெனது பாட்டில் இவர்க்கோர் உரிமையுண்டா?”
என்றியம்பி நெஞ்சம் இனைந்தன்றோ வெம்புவான்;
பாட்டுலகைக் காணப் பரிவோடு கம்பனிந்த
நாட்டகத்தே வந்தால் நலிவெய்திப் போகானோ?
பாடும் மரபறியார் பாட்டின் திறமுணரார்
கூடும் இலக்கணத்தைக் கொல்லும் வகைதெரிவார்
பாவென்ற பேராலே பாடித் தொகுத்தெடுத்து
நாவொன்று கொண்டு நவில்கின்றார்; அன்னவர்தாம்
நாட்டிற் கவிஞரென நல்லதொரு பேர்தாங்கி
ஏட்டில் எழுதியதும் ஏறுநடை போடுகின்றார்;
குற்றஞ் செறிந்தகவி கொட்டித் திரிபவரைச்
செற்றமிகக் கொண்டு செவியை அறுப்பதற்குங்
குட்டுதற்கும் வெட்டுதற்கும் கூறும் அவர்சொல்லைத்
தட்டுதற்கும் ஆளில்லை என்ற தருக்காலோ
பாட்டுலகைப் பாழ்படுத்திப் பாடித் திரிகின்றார்?
கேட்டைக் களையக் கிளர்ந்தெழுவார் இல்லைஎனில்
பாட்டுந் தமிழும் பரவும் இலக்கியமுங்
கேட்டுக் கிலக்காகிக் கீழ்நிலையிற் போய்வீழும்;
வீழுநிலை வந்து விடுமோ எனமயங்கிச்
சூழும் புகழ்க்கம்பன் துன்பத்தால் வெம்பிடுவான்;
அண்டை மொழிகள் அருமைத் தமிழ்மொழிக்குள்
ஒண்டஇடம் தந்தால் ஒலிக்கும் மரபறிந்து
சொல்லும் முறைதெரிந்து சொல்லினான் நம்கம்பன்;
புல்லுங் கவிபுனைவோர் புக்கமொழிச் சொல்லைஎலாம்
அள்ளிச் செருகி அயன்மொழியின் ஓசைதனைச்
சொல்லிக் கதைக்கின்றார் சொன்னாற் புரிவதிலை;
செம்மொழியாம் நம்மொழிக்குச் சேயாய்ப் பிறந்திருந்தும்
எம்மொழிதான் வந்தாலும் ஏத்தித் துதிக்கின்ற
பேதை மனத்தவராய்ப் பேரால் தமிழரென்பார்
தீது வரும்நிலையில் செந்தமிழைக் கண்டாலும்
ஏதும் அறியா திருக்கின்றார் பேரளவில்;
ஓதுந் தமிழின் உயர்வொன்றும் எண்ணுகிலார்;
தாய்மொழிக்குத் தன்னுரிமை தாராத வன்கொடுமைப்
பேய்நிலையைக் கண்டபினும் பேசா திருக்கின்றார்;
இத்தகுநன் மாந்தர்தமை எம்கம்பன் காணுங்கால்
“பித்தரெனத் தக்கவரைப் பிள்ளைஎனப் பெற்றாளே!
நன்றறிவு காண்கின்ற நாளிவர்க்கு வாராதோ?”
என்றெல்லாம் எண்ணி இரங்கிமனம் வெம்பிடுவான்;
எல்லா வுயிர்க்கும் பிறப்பொக்கும் என்றுணர்ந்தும்
அல்லா நெறிசென்றோம் அப்பிறப்பில் தாழ்வுயர்வும்
செல்வம் பதவியெனச் செப்பும் அவற்றுள்ளும்
பல்வகைய வேற்றுமை பண்ணிப் பிளந்தோம்
கொடுப்பாரும் அப்பொருளைக் கொள்வாரும் இல்லா
மிடுக்கான ஒருலகம் வேண்டும் எனவெண்ணிக்
காதையொன்று கண்டான் கனவொன்றுங் கண்டானிங்
கேதொன்றுங் காணவிலை இன்றுவந்த நம்கம்பன்
தீது மிகக்கண்டான் தேவையிலா வேற்றுமைகள்
மோதி வரக்கண்டான் மூச்செறிந்து வெம்புகிறான்;
பெண்மைக் குயர்வுதரப் பேணி மதிப்பளிக்கக்
கண்ணுக் கிணையாக் கருதிவர எண்ணிச்
சிறையிருந்தா ளேற்றத்தைச் செப்பினான் கம்பன்
நிறைமிகுந்த பெண்டிர் நெறிபிறழ்ந்து செல்வதையும்
நாகரிகப் பேரால் நடமாடிச் சீர்குலைந்து
வேகமுடன் பாழ்நிலைக்குள் வேண்டிப் புகுவதையும்
ஆடைக் குறைப்பென் றலங்கோலஞ் செய்வதையும்
மேடைப் பொருளாகி மேல்மினுக்கித் தாழ்வதையும்
காணுங்கால் நம்கம்பன் கண்பொத்தி நின்றிடுவான்;
நாணம் எனுமொன்றை நாடே வெறுத்ததென

வேடன்கைப் புள்ளேபோல் வெம்பியே போய்விடுவான்
நாடுபுகழ்க் கம்பன் நலிந்து

**பாடற் குறிப்பு:–** திருமலைராயன்பட்டினம் கம்பர் விழாக் கவியரங்கில் பாடியது – 16.4.1967.
**அருஞ்சொற் பொருள்:–** 1. கால்பட்ட – வாய்க்கால் சென்ற.
2. கஞ்சம் – தாமரை. 3. சாலி – நெற்பயிர். 4. நாட்டு அரசன் கோட்டை நகர் விடுத்து – நாட்டை ஆளும் அரசனுடைய கோட்டை நகர் சூழ்ந்த நகரை நீங்கி. 5. கேட்டுக் கவிகள் – கெட்ட கவிதைகள்.

## 51. சான்றோர் செய்த பிழை

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

கற்றில ராகினும், மற்றுயர் குணநலன்
அற்றன ராகினும், அருள்பொருள் பெற்றவர்
முற்றநன் மதிப்பினைப் பெற்றிடல் காண்குதும்;
தமக்கென ஒருதொழில் தாங்கில ராகி
உமக்கும் எமக்கும் உருகுதல் போல
மயக்குறப் பேசி மறுநாள் மாறி
நாளொரு மேடையில் நடைபயில் அரசியல்
வாதியர் தமக்கும் வழங்குவர் மதிப்பு;
தடவிய பொடியால் தகதக முகத்து
நடிகர் தமக்கும் நன்மதிப் பளிப்பர்;
ஆன்றவிந் தடங்கிய சான்றோர் தமக்கோ
ஏன்தர மறந்தனர் ஏற்றநன் மதிப்பை?
பெரும்பொருள் தேடா திருந்தனர் அதுபிழை;
அரசியல் ஓந்தி ஆகிலர் அதுபிழை;
பொடியால் உடையால் புதுமெரு கேற்றும்
நடிகர் ஆகவும் நயந்திலர் அதுபிழை;
இற்றை நிலையினை எண்ணுங் காலை
பற்றி எரியும்என் பாழ்படு நெஞ்சே.

**பாடற் குறிப்பு:–** 27.4.1978 ஆம் நாள் பாடியது.

## 52. பாழ்பட்ட எழுத்தாளர்

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

மயிலுக்கும் நெறிமுறைகள் எழுதிக் காட்டி
மாந்தருக்கு வழிகாட்டி விளங்கும் நாட்டில்
இயலறிவு, மொழியறிவு, கல்வி, கேள்வி,
இத்தனையும் பெற்றிருப்பர் எழுத்தர் என்போர்
பயனளிக்கும் இவ்வொன்றும் இல்லா ராகிப்
பாழ்பட்ட கதைகளையே எழுதிக் கொட்டிக்
கயிறுதிரிக் கின்றதிருக் கூட்டத் தாரே
காசுமிகும் எழுத்தாளர் இந்த நாட்டில்!

**பாடற் குறிப்பு:–** 1960களில் மதுரை எழுத்தாளர் மன்றக் கவியரங்கல் பாடியது. பாடிய பாடல்கள் பலவெனினும் இப்பாடல் ஒன்றுதான் கிடைத்தது.

## 53. பேச்சாளர்

**['ஊன்றுகோல்' காப்பியத்தின்
'சபைகாண் காதை' யிலிருந்து சில அடிகள்]**

இலக்கியங்கள் பயிலாமல், இலக்க ணத்தின்
இயல்பொன்றும் அறியாமல், நுனிப்புல் மேய்ந்து
சொலக்கருதும் ஒருபொருளைச் சிந்தித் தாய்ந்து
சொலுமுறையாற் சொல்லாமல், முழக்க மிட்டுக்
கலக்கிவரும் பேச்சாளர் இற்றை நாளில்

கணக்கிலராய்ப் பெருகிவரல் காணு கின்றோம்;
இலக்கவர்க்குப் பொருள்வருவாய் ஒன்றே யன்றி
இலக்கியத்தின் வளர்ச்சியன்று; யாது செய்வோம்? 1

பழுதறநூல் பயில்வார்பின் அதனுள் தோய்ந்து
பயன்பெறுவார் இன்புறுவார் சிந்தித் தாய்ந்து
முழுமதியாற் பகுத்துணர்ந்து முடிபு காண்பார்
மொழியுங்கால் நிரல்படுத்தி அவையில் நின்று
வழுவகல நன்மொழியாற் கேட்போர் நெஞ்சம்
மகிழ்ந்துகொள எடுத்துரைப்பார் அற்றை நாளில்;
தொழுதகையார் பெறுமின்பம் பிறரும் பெற்றுத்
துய்ப்பதையே காமுறுதல் தொன்மைக் கொள்கை 2

## 54. ஈகை

**['ஊன்றுகோல்' காப்பியத்தின்**
**'சொல்வல்ல காதை' யிலிருந்து சில அடிகள்]**

சொலக்கேட்டு விழியிமைகள் இமைப்பதிலை
தூண்டுவதால் ஈகைமனம் பிறப்ப தில்லை;
மலைக்காட்டில் திரிமயில்கள் தோகைதனை
வற்புறுத்திக் கூறுவதால் விரிப்ப தில்லை,
மலைக்கோட்டு மாமுகிலும் பிறர்சொல்லை
மதித்தெழுந்து மழைநீரைப் பொழிவ தில்லை;
தலைக்கொள்ளும் இயல்புணர்வால் மனங்குளிர்ந்து
தானுவந்து வழங்குவதே ஈகை யாகும் 1

குலவிவருஞ் செல்வத்தைப் பெட்டகத்துட்
குவித்தெடுத்துப் பார்ப்பதிலே என்ன கண்டோம்?
செலவுசெயத் தன்னலந்தான் வழியென்று
தனித்துண்டு வாழ்வதிற்றான் என்னகண்டோம்?
பலவிருந்தும் [1]உண்பதுவும் உடுப்பதுவும்
ஓரளவே; பகுத்துணர்ந்தால் உண்மை தோன்றும்;
உலவிவரும் [2]இயல்பினதை ஒடுக்காமல்
ஊர்நலத்துக் குதவிவரல் இன்ப மன்றோ? 2

---

**பாடற் குறிப்பு:–** 1. உண்பதுவும் உடுப்பதும் – 'உண்பது நாழி உடுப்பன இரண்டே' (புறம்). 2. இயல்பினதை–செல்வத்தை.

## 55 எப்படிப் பெரியார் வாழ்வார்?

**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

பெரியார் எப்படி வாழ்வார் – நம்
பேச்சும் செயலும் பிளவுபட் டிருந்தால்
–பெரியார்
சரியா தவறா சடங்குகள் என்றே
அறியா திருந்தால் அறிவையும் மறந்தால்
–பெரியார்
சாதியும் மதமும் சரிப்பட வில்லை
சமுதா யந்தான் உருப்பட வில்லை
மோதிய பகையோ சாய்ந்திட வில்லை
மூடமும் இங்கே மாய்ந்திட வில்லை
–பெரியார்
சிந்தனை செய்கெனச் செப்பினர் அன்றோ?
சிறிதும் நும்செவி புகுந்ததும் உண்டோ?
மந்தைகள் போலினும் வாழ்வது நன்றோ?
மாந்தர்கள் எனநீர் மாறுவ தென்றோ?
–பெரியார்

---

**பாடற் குறிப்பு:–** 6.12.1982 ஆம் நாள் பாடியது.